பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 01 செவ்வாய்க்கிழமை (16-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:357

# புலிகளுடன் பேச்சுத் தொடரமுன் தெற்கில் இணக்கநிலை அவசியம்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு,நவம்பர் 16

"விடுதலைப் புலிகளோடு பேச்சைத் தொடர்வதற்கு முன்னர் தென்னிலங்கையில் பிரதான கட்சிகள் இடையே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இணக்கநிலை ஏற்படுவது அவசியம்.

"விடுதலைப் புலிகளை பேச்சுமேசைக்குக் கூட்டிவருவதை விட, தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதே சிரமமான விடயம்"

- இப்படிக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

துறைசார் நிபுணர்கள் அமைப்பின் 24 ஆவது தலைவரின் பதவியேற்பு வைபவம் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரைக்கு முன்னர் அங்கு ஐ.தே.கட்சியின் பிரதித்தலைவரும், எம்.பியுமான கரு ஜயசூரிய உரையாற்றினார்.

அப்போது கரு ஜயசூரிய கூறியதாவது:-

இரண்டு பெரிய அரசில் கட்சிகளுமே தங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது அவசியம்.

நாங்கள் எங்களுக்குள்ளேயே மோதிக்கொள்வது நமக்கிடையேயான காயத்தை மேலும் ஆழப்படுத்துமே தவிர, ஆறவைக்காது.

நாடு மிக முக்கியமான - நெருக்கடியான - காலகட்டத்தில் உள்ளது.

அரசு இரண்டு பக்கத்தினாலும் எரிந்து கொண்டிருக்கின்றது. நாங்கள் பரஸ்பரம் நம்பிக்கையோடும், சிரத்தையோடும் செயற்படாவிட்டால்

(16ஆம் பக்கம் பார்க்க)



## திருட்டுச் சந்தேகநபர்கள் இருவர் நேற்றிரவு சிக்கினர்!

யாழ்.நீராவியடி மற்றும் துட்டாதெருச் சந்திப் பகுதிகளில் நேற்றிரவு கடை உடைத்துத் திருட முயன்றதாகக் கூறப்படும் இருவர், இளைஞர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடுகள் மீது நேற்றிரவு கல்வீச்சு இடம்பெற்றதெனவும் -

இதனால், விழித்துக்கொண்ட அப்பகுதியைச சேர்ந்த இளைஞர்கள், கல் வீச்சில் ஈடுபட்டவர்களைத் துரத்திப் பிடிக்க முயன்றவேளையில திருடர்கள் இருவர் சிக்கினர் எனவும் - கூறப்பட்டது.

திருட்டுச் சந்தேக நபர்கள் இருவரும் நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவுள்ள மின்கம்பம் ஒன்றில் கட்டிவைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது. (எ-6)

## சண்டைக்கும் தயார்; சமாதானத்துக்கும் தயார்

### முழங்குகிறார் அநுரா பண்டாரநாயக்க

சமாதான முறையில் - அதிகாரப் பகிர்வு மூலம் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தயாராகவிருக்கிறோம். அதேநேரம் அடிபிடிக்கு வந்தால் யுத்தத்துக்கும் நாம் தயார்.

- இப்படிக் கூறுகிறார் அநுரா பண்டாரநாயக்க.

நேற்றுமுன்தினம் மாலை பொலனறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவா இப்படிக் கூறினார்.



அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய அரசு தொடர்ந்து ஆறு வருடங்களுப் பதவியிலிருக்கும். இதற்கு மேலதிகமாக மேலும் ஆறு வருடங்கள் அது பதவிக்கு வரும் என்றும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

சமாதான வழிமுறைகள் மூலம் அதிகாரப் பகிர்வு ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும்.

அரசிற்கு யுத்தம் செய்யவேண்டிய தேவை இல்லை. சமாதான முறையில் அதிகாரப் பகிர்வு இடம்பெறும் பொழுது சிங்களவர்களோ, முஸ்லிம்களோ

(16ஆம் பக்கம் பார்க்க)

## பூசகரை பலிகொண்ட பவுஸரின் சாரதி நாளை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,நவ.16

கொடிகாமத்தில் இந்துப் பூசகரை மோதிப் பலி கொண்ட விபத்தில் சம்பந்தப்பட்ட பவுஸரின் சாரதி டபிள்யூ.டபிள்யூ.ஆர்.ஜெயசிங்க நாளை புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்.

கண்டி வீதியில் கொடிகாமத்திற்கு அருகே உள்ள இராமாவில் கோயிலுக்கு அண்மையில் வைத்து கல்வியங்காட்டைச் சேர்ந்த வ.ஹரிகரசர்மா என்ற இந்துப் பூசகர் ஞாயிறன்று இராணுவத்தினரின் தண்ணீர் பவுஸரால் மோதப்பட்டு உயிரிழந்திருந்தார்.

உடனடியாகச் சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி பதில் நீதிவான் சு.கந்தசாமி பவுஸரைச் செலுத்தி வந்த சிப்பாயைக் கைது செய்யு

(16ஆம் பக்கம் பார்க்க)

## நீர் நிரம்பிய குழியினுள் வீழ்ந்த ஒன்றரை வயதுக் குழந்தை மரணம்!

### பொம்மைவெளியில் நேற்றுமாலை சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.16

கிணற்றுக்காக வெட்டப்பட்ட நீர் நிரம்பிய குழியினுள் வீழ்ந்து உயிரிழந்ததாகக் கூறி குழந்தை ஒன்றின் சடலம் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.பொம்மைவெளிப் பகுதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுதாகரன் கென்ஸியா என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தது.

மதிய உணவை முடித்துவிட்டு குழந்தையை உறங்கவைத்து தானும் உறங்கியதாகவும -

கண்விழித்துப் பார்த்தபோது குழந்தையைக் காணாது தேடியதாகவும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துச்சபை பஸ்களை மறித்து நாவற்குழி மாணவர் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.நகரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் நாவற்குழிப் பகுதி மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் நேற்று நாவற்குழிச் சந்தியில் ஒன்று திரண்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான - பாடசாலை சேவையில் ஈடுபடும் - பஸ்கள் நாவற்குழிச் சந்தியில் தரித்துச் செல்வதில்லை என்றும் -

இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே இந்த மறியல் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் - மாணவர்களின் தரப்பில் கூறப்பட்டது.

இந்த மறியல் காரணமாக சுமார் 3 மணித்தியாலங்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மட்டும் கண்டி வீதியூடாகப் பயணம் செய்யமுடியாதவாறு தடுத்து நிறுத்தப்பட்டன.

காலை 9 மணி தொடக்கம் பகல் 11.30 மணிவரை இடம்பெற்ற இந்த மறியல் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் அவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டோருக்கு ஆதரவாக ஆஸியில் இன்று பேரணி!

ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்துக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் நிலையில் உள்ளவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் விசேட வதிவுரிமை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஆஸ்திரேலிய நாடாளுமன்ற முன்றிலில் இன்று செவ்வாய்க்கிழமை அமைதிப் பேரணி நடத்தப்படவுள்ளது.

ஆஸ்திரேலியாவில் புதிய அரசின் சம்பிரதாயபூர்வ - முதல் - நாடாளுமன்ற அமர்வு நாளன்று, பல்லின சமூகத்துடன் இணைந்து நடத்தப்படும் மேற்படி பேரணியை விக்கோரியன் தமிழ் கலாசாரக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர் என மேற்படி அமைப்பின் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் அவர்களது

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிக்கு எம்.பி. ஒருவரை ஹெல உறுமய கட்சியிலிருந்து நீக்கியமை தவறு

### உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு,நவ.16

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.அப்பரகே புஞ்ஞானந்த தேரர் அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை சட்டத்துக்குப் புறம்பானது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

அதனால், அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் தொடர்ந்து நீடிக்க முடியும்.

தம்மைக் கட்சியிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து அவர் தாக்கல் செய்திருந்த மனுவின் மீது உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இம்மனுவில் ஹெல உறுமயவின் தலைவர் வண.எல்லாவல மேதானந்த தேரர், செயலாளர் சம்பிக்க ரணவக்க, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஹெல உறுமயவின் அதியுயர் சங்கப்பீடத்தைப் பிரதிநிதித்துப்படுத்தியே தான் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார் என மனுதாரர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

காரணமெதுவுமின்றித் தன்னைக் கட்சியில் இருந்து நீக்கியமையை ரத்துச் செய்யுமாறும் அவ்வாறு அறிவித்தமை நியாயமற்றது என உத்தரவிடுமாறும் நீதிமன்றை அவர் கோரியி

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து விலகுகின்றார்!

வாஷிங்ரன்,நவ.16

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் பதவி விலக உள்ளார். இதனை வாஷிங்ரன் உறுதி செய்துள்ளது. எனினும், அவர் எப்போது பதவிவிலகுவார் என்பது மட்டுமே தெரியவில்லை. ஜனவரியில் அவர் பதவிவிலகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



மேலும், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் அமைச்சரவை உறுப்பினர்கள் மூன்று பேரும் தமது ராஜினாமா குறித்து அறிவிக்கலாம் எனவும் ... டுள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் திருமதி ஆன் வெனமன், கல்வித்துறை அமைச்சர் ரொட்பைஜ், மின்சக்தித்துறை அமைச்சர் ஸ்பென்ஸர் ஆபிரஹாம் ஆகியோரே பதவிவிலக இருக்கும் மூன்று அமைச்சர்கள்.

பதவி விலகவிருக்கும் கொலின் பவல் மற்றும் மூன்று பேரின் இடங்களுக்கு நியமிக்கப்பட இருப்பவர்கள் குறித்தும் இன்னும் அறியமுடியவில்லை.

எனினும், ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்கத் தூதர் ஜோன் டன்போர்த், கொலின் பவ

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இத... ம் இன்றைய நாளிதழ்

# நாட்டின் பொருளாதாரத்தோடு இந்த அரசு விளையாடுகிறது!

## எச்சரிக்கிறார் முன்னாள் பிரதி நிதி அமைச்சர்

கொழும்பு,நவ.16

அரசு நாளைமறுதினம் சமர்ப்பிக்கவிருக்கும் வரவு - செலவுத் திட்டம் வெளியே அழகாக 'ஐசிங்' பூசப்பட்ட ஒரு கேக், அதன் உள்ளடக்கமோ வெகுமோசம், அதன் விளைவை மக்கள் ஒரு சில மாதங்களில் அனுபவிப்பர். - என்கிறார் முன்னாள் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பந்துல குணவர்த்தன, நாட்டு மக்கள் பெரும் பஞ்சத்துக்கு முகங்கொடுக்கப் போகிறார்கள் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், தொடர்ந்து கூறியதாவது:-

தற்போது நிதியமைச்சராகப் பதவி வகிக்கும் சரத் அமுனுகம பொருளாதாரத்துறை பற்றி எதுவும் தெரியாத ஒரு குழந்தை. அவர் இத்துறையில் எந்த அனுபவமும் இல்லாதவர். நாடு பெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்திருக்கும் ஒரு சூழ்நிலையில் ஆறாயிரம் கோடி ரூபா அச்சிடப்பட்டுள்ளது. பொருளாதாரம் வீழ்ச்சியுற்று இருக்கும் ஒரு சூழ்நிலையில் வெறும் காகிதங்களை அச்சடித்து நோட்டாக விநியோகித்தால் அதன் விளைவு எப்படி அமையும் என்பது பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காமல் அரசு பொருளாதாரத்துடன் தனது விருப்பப்படி விளையாட முற்பட்டுள்ளது. இதன் பிரதிபலனை மக்கள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் அனுபவிக்கவேண்டிநேரும்.

அரசு பதவியேற்றதன் பின்னர் வர்த்தக வங்கிகளில் மட்டும் ஆறாயிரத்து 132 கோடி ரூபா கடன் பெற்றுள்ளது. சதொச மற்றும் சில அரச நிறுவனங்களால் 5 ஆயிரம் கோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டத்திற்குப் புறம்பாக 117 ஆயிரத்து 732 கோடி ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளனர்.

ஜே.வி.பியினரோ உண்மைநிலை புரியாமல் வரலாற்றில் முதல் முதலாக இடம்பெறப் போகும் உயரிய வரவு - செலவுத்திட்டம் இது என்று கூறி வருகின்றனர். இதன் விளைவை அனுபவிப்பது வெகுதூரத்தில் இல்லை என்ற எச்சரிக்கையை அவர்களுக்கு விடுக்கிறேன் - என்றார் அவர். (எ-க)

## ஆய்வுகூட - ஊழியர் பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு,நவ.16

நாடு முழுவதிலும் உள்ள அரச வைத்தியசாலை ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் நேற்றுக்காலை 8 மணிமுதல் பணிப் பகிஷ்கரிப்பில் குதித்தனர். சுகாதார அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

மக்களின் அவசரத் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கொழும்பு பெண்கள் மகப்பேற்று வைத்தியசாலை, மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை, நாரஹேன்பிட்டிய இரத்த வங்கி ஆகியவற்றில் தமது ஊழியர்கள் வழமையான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (எ-க)

## மாணவியைக் கடத்த எடுத்த முயற்சி அவரது புத்திசாதுரியத்தால் தோல்வியில்!

அச்சுவேலி,நவ.16

மாணவியைக் கடத்த இளைஞர்கள் சிலர் மேற்கொண்ட முயற்சி மாணவியின் புத்திசாதுரியத்தால் தடுத்துநிறுத்தப்பட்டது.

சம்பந்தப்பட்ட மாணவி பாதுகாப்பான முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை பிற்பகல் அச்சுவேலியில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து மினிபஸ்ஸில் புறப்பட்ட 17 வயது மாணவியைக் கடத்த முயன்றதாகக் கூறப்படும் இளைஞர் குழு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்துள்ளது.

இதனை அவதானித்த மாணவி, கோப்பாயில் இறங்கி கைதடிக்குச் செல்ல வேண்டிய தனது பிரயாணப் பாதையை மாற்றி, அச்சுவேலி செல்லும் மினிபஸ்ஸில் ஏறி அச்சுவேலி - சங்கானை வீதிச் சந்தியில் இறங்கியுள்ளார். பின்னர் அங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தடியில் கூடிநின்ற இளைஞர்களிடம் சம்பவத்தைக் கூறி தன்னைக்காப்பாற்றுமாறு கோரியுள்ளார்.

அப்போது அங்குவந்த கடத்த முயன்றதாகக் கூறப்படும் இளைஞர்கள் மாணவியைத் தங்களுடன் அனுப்பிவைக்குமாறு முரண்டுபிடித்தனர். நிலைமையை அவதானித்த அச்சுவேலிப் பகுதி இளைஞர்கள் மாணவியைப் பாதுகாப்பான முறையில் நீர்வேலியில் உள்ள விடுதலைப் புலிகளின் கோப்பாய் பிரிவு அரசியல் செயலகத்தில் ஒப்படைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ-11)

## செய்தியாளர் தாக்கப்பட்டமை குறித்து பூரண விசாரணை நடத்தப்படவேண்டும்

### சுதந்திர ஊடக இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.16

கொடிகாமத்தில் இராணுவ பவுஸர் வாகனம் இந்துப் பூசகர் ஒருவரை மோதிய சம்பவம் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற பிராந்தியச் செய்தியாளர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பூரண விசாரணை நடத்தப்படவேண்டும் என்று சுதந்திர ஊடக இயக்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் - தென்மராட்சி - கொடிகாமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவமொன்றினை செய்தி சேகரிக்கச் சென்ற பிராந்திய ஊடகவியலாளர்கள் இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்பட்டு மற்றும் அவர்களது புகைப்படக்கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவத்தினைச் சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இராணுவத்திற்குச் சொந்தமான பவுஸர் வாகனமொன்றிற்குள் இந்து பூசகரொருவர் நசுங்குண்டு உயிரிழந்த சம்பவம் தொடர்பாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு ஒன்றுதிரண்ட மக்கள் கூட்டத்தினரை செய்தி சேகரிக்கச் சென்ற ஈழநாதன் மற்றும் ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் ஊடகவியலர்களே தாக்கப்பட்டுள்ளதாகச் சுதந்திர ஊடக இயக்கத்திற்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. கே.கஜிதன், மரியம்பிள்ளை ஆஞ்செலியன் ஆகியோரே இச்சம்பவத்தில் தாக்கப்பட்டுள்ளனர்.

இதற்குச் சில மாதத்திற்கு முன்னர் தென்பகுதி கொஸ்கொடையில் இவ்வாறானதொரு சம்பவத்தினை செய்திசேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பலர் பொலீஸாரினால் தாக்கப்பட்டனர். இது ஊடகத் துறையைச் சீருலைக்கும் மற்றுமொரு சம்பவமாகும். இவ்வாறான தூக்குதல்கள் மற்றும் தடைகள் காரணமாக ஊடகவியலாளர்களின் கடமையைச் சுதந்திரமாக மேற்கொள்ளமுடியாது போவதுடன், அதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிந்துகொள்வதற்கும் உரிமை தடைசெய்யப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாகப் பூரண விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுதந்திர இயக்கம் அரசைக் கோரியுள்ளது - என உள்ளது. (எ-3)

## வெலிக்கடைச் சிறையில் கைதிகள் அடிபிடி! கலாட்டா!!

வெலிக்கடையில் கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஆறுபேர் காயமடைந்துள்ளனர்.

கலாட்டாவில் ஈடுபட்ட பத்துக் கைதிகள் உடனடியாக வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த சனிக்கிழமை இரவு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் வைத்து ஹெரோயின் வியாபாரம் செய்பவர்கள் என்று கருதப்படும் இரு நபர்களுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது. அது பின்னர் இரு கோஷ்டிகளுக்குமிடையில் பெரும் மோதலாக வெடித்துக் களேபரமானது.

இதனால் நிலைமையைக் கட்டுப்படுத்த சிறைச்சாலையின் அபாயச் சங்கு ஊதப்பட்டதோடு, மேலதிக பாதுகாப்புக்காகக் காவலர்களும் அழைக்கப்பட்டனர். சில மணித்தியாலங்களில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து சிறைச்சாலையில் உள்ள அறைகளைச் சோதனைக்கு உட்படுத்திய சிறைச்சாலை அதிகாரிகள் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு கையடக்கத் தொலைபேசிகளைக் கைப்பற்றினர்.

இந்த மோதல் சம்பவத்தில் காயமடைந்த ஆறுபேர் வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை விசாரிப்பதற்கு எனச் சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் விவரம் திரட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.16

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த - சேராத பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் சேத விவரங்களைச் சேகரிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில், சங்க அங்கத்தவர்கள் அல்லாதவர்களும், கல்விசார் ஊழியர்களும் கலந்து படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து தரலாம் என சங்கச் செயலாளர் அ.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (எ-12)

## தொடரும் மழையால் மன்னாரில் ஆயிரத்து 355 குடும்பங்கள் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக ஆயிரத்து 355 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக மாவட்டத்தின் எமில் நகர், சாந்திபுரம், பன்கொட்டுப் பகுதி, உப்புக்குளம், பள்ளிமுனை ஆகிய பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக மக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் நகர விளையாட்டரங்கு உட்பட பொது இடங்கள் பலவற்றிலும் நீர்தேங்கியுள்ளது. வெள்ளநீரை அகற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாகப் புத்தளம் பகுதியின் தாழ்ந்த பிரதேசங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகளும் நீரில் மூழ்கியுள்ளன. பல நூறு குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன எனறும் தெரிவிக்கப்படுகிறது. (எ)





வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களை இடைமறித்து நாவற்குழி மாணவர்கள் நேற்று நடத்திய மறியற்போராட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கொட்டும் மழையின் மத்தியிலும் மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(படங்கள்: தீபன்)

### பாடசாலை நேரத்தில் கல்லூரிக்கு முன்பாக

## மோட்டார் சைக்கிளில் சமாந்தரமாக சென்றவருக்கு ஆயிரம் ரூபா அபராதம்!

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக மோட்டார்ச்சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற இளைஞர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்த யாழ். நீதிமன்றம், மோட்டார் சைக்கிளை இருவாரத்துக்கு நீதிமன்றத்தில் தடுத்துவைக்கும்படியும் உத்தரவிட்டது.

வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக பாடசாலை நேரத்தில் இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில், சைக்கிலுடன் சமாந்தரமாகச் சென்றார் என்றும் -

அப்பகுதியில் போக்குவரத்துக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலீஸார் அவரை மறித்தபோதும் அவர் நிற்காமல் சென்றதையடுத்து அவரைப் பொலீஸார் கைது செய்திருந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப நபர் யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், அவரது மோட்டார்ச் சைக்கிளை இருவாரத்துக்குத் தடுத்துவைக்கும்படியும் உத்தரவிட்டார். (எ-3-7)

# பலஸ்தீன முன்னாள் பிரதமர் அப்பாஸ் மீது துப்பாக்கிச் சூடு!

## அவர் உயிர் தப்பினார்; பாதுகாவலர்கள் இருவர் பலியாகினர்

ஜெருசலேம்,நவ.16

பலஸ்தீன முன்னாள் பிரதமரும் மறைந்த தலைவர் அரபாத்தின் பதவிக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுபவர்களில் ஒருவருமான மொஹமட் அப்பாஸ் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் இருந்து அப்பாஸ் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

அரபாத்துக்கான காலை அஞ்சலியைச் செலுத்தச் சென்ற அப்பாஸ் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆயுதங்களுடன் திடீரெனத் தலைமை அலுவலகக் கட்டடத்துக்குள் நுழைந்த ஒரு கூட்டத்தினர், கதவுகளை இழுத்து மூடியதுடன் அப்பாஸுக்கு எதிராக ஆத்திரத்துடன் கோஷங்களை எழுப்பினர். குழுவினர் அவரை நோக்கித் திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். எனினும், அப்பாஸுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அவரது பாதுகாவலர்கள் அவரைப் பாதுகாப்பாக அங்கிருந்து வெளியேற்றிவிட்டனர். ஆனால், பாதுகாவலர்களில் இருவர் உயிரிழந்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் அப்பாஸின் நெருங்கிய சகாவும் காஸா நகர முன்னாள் பாதுகாப்புத் தலைமை அதிகாரியுமான மொஹமட் டாலனுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர். அவரும் அப்பாஸும் அமெரிக்கர்களின் கைக்கூலிகள் என்றும் கத்தினர்.

தாக்குதல் நடத்தியவர்கள் அப்பாஸை எதிர்த்துக்கொண்டு பதாஹ் அமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலின் பின்னர் அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். இந்தத் தாக்குதலில் குறைந்தது 4 பலஸ்தீனர்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரபாத்தின் மறைவுக்குப் பின்னர் அவரது தலைமையை நிரப்புவதில் ஏற்பட்டுள்ள கடும் போட்டியை இந்தத் துப்பாகிச் சூட்டுச் சம்பவம் வெளிக்காட்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீன அதிபருக்கான தேர்தல் ஜனவரி மாதம் 9ஆம் திகதி இடம்பெறும் என்று பலஸ்தீன அதிகார சபை அறிவித்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தன் மீதான தாக்குதலின் பின்னர் அரபுத் தொலைக்காட்சியில் தோன்றிப் பேட்டியளித்த அப்பாஸ், இந்தச் சம்பவத்தைப் பற்றி 'அமத்தி வாசித்தார்' "நிலைமை இப்போது இயல்பாக இருக்கின்றது" - என்றார் அவர்.

"உணர்ச்சிவசப்பட்ட நிலையிலேயே அவர்கள் அப்படி நடந்துகொண்டார்கள். நான் நினைக்கிறேன். இந்தச் சம்பவத்துக்கு அரசியலோ தனிப்பட்ட காரணமோ இல்லை என்று" - இப்படி அவர் அந்தப் போட்டியில் தெரிவித்தார்.

எனினும், அரபாத்தின் மறைவுக்குப் பின்னர் பலஸ்தீனத் தலைமைக்குள் ஏற்பட்டுள்ள குழப்பதையும் அதிகாரத்துக்கு இடம்பெறப்போகும் மோதல்களையும் இந்தச் சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது என்று ஜெருசலேத்தில் உள்ள பத்திரிகையாளர்கள், அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனவரி 9ஆம் திகதி புதிய ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து டிசெம்பர் 27 ஆம் திகதி முதல் பிரசாரப் பணிகள் ஆரம்பமாகும். இவை வன் முறை மிகுந்தவையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(க-3)

## காஞ்சிபுரம் மடம் நேற்று திடீர் சோதனை

காஞ்சிபுரம்,நவ.16

காஞ்சிபுரம் நகரில் உள்ள காஞ்சிசங்கர மடம் நேற்று நண்பகல் பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

காஞ்சிபுரம் நீதிமன்றத்தின் அனுமதியுடன் நகர பொலீஸ் இன்ஸ்பெக்டர் முனியப்பன் தலைமையில் பத்துப் பொலீஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அச்சமயம் பக்தர்கள் எவரும் ஆச்சிரமத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஜெயேந்திரா மற்றும் விஜயேந்திரர் புனித யாத்திரை சென்றதால் அவர்கள் அறைகள் பூட்டப்பட்டிருந்தன. அந்த அறைகளையும் திறந்து பொலீஸார் சோதனை நடத்தினர்.

அங்கிருந்த கணனிகள், கோவைகள் ஆகியவற்றைப் பொலீஸார் எடுத்துச்சென்றனர்.

இத்தேடுதல் குறித்துப் பொலீஸ் உயர் அதிகாரியைத் தொடர்பு கொண்டபோது கருத்துத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். இந்த சோதனையில் என்னென்ன பொருள்கள் கைப்பற்றின என்பது பற்றிய விவரங்களையும் அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

காஞ்சிமடத்தில் இருந்த காமாட்சி அம்மன் கோயில் செயலாளர் செல்லப்பா மற்றும் காமாட்சி அம்மன் சத்திரத்தின் நிர்வாகி விஸ்வநாதன் ஆகியோரிடம் பொலீஸார் ரகசிய விசாரணை நடத்திய வருகிறார்கள்.

காஞ்சிமடத்தின் புகைப்படக்காரராக இருப்பவர் ராமு. இவரது வீடு காஞ்சிபுரம் கீழண்டை ராஜ வீதியில் உள்ளது. இவர் தனது வீட்டிலேயே போட்டோ ஸ்டுடியோவும் நடத்தி வருகிறார்.

(3)

## லண்டன் அருங்காட்சியகத்தில் ஓட்டோவும் காட்சிக்கு!

லண்டன்,நவ.16

சிறந்த எரிபொருள் திறன் கொண்ட வாகனம் என்ற வகையில் நமது வீதிகளில் ஓடித் திரியும் ஓட்டோ லண்டன் அறிவியல் அருங்காட்சியகத்தில் இடம்பிடித்துள்ளது.

லண்டனில் உள்ள அறிவியல் அருங்காட்சியகம் பல மாடிக் கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது. இங்கு சுமார் 3லட்சம் அபூர்வ பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

18ஆம் நூற்றாண்டில் இருந்து தற்போது வரை அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் என்பன இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 1857ஆம் ஆண்டு லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட சதர்ன் கென்சிங்டன் அருங்காட்சியகம்தான் தற்போதுள்ள அறிவியல் அருங்காட்சியகமாக மாறியுள்ளது. இந்த அருங்காட்சியகம் கடந்த 1982 ஆம் ஆண்டு முதல் மிகப் பெரிய பலமாடிக் கட்டடத்தில் செயற்பட ஆரம்பித்து.

இந்தக் கட்டடத்தின் இரண்டாவது மாடியிலேயே ஓட்டோ காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. சிறந்த எரிபொருள் திறன்கொண்ட வாகனம் என்ற பெருமையும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் முன் வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையில் 'பஜாஜ்' ஓட்டோக்கள் இந்திய வீதிகளில் ஓடும் பிரபலமான வாகனம். 145 சிசி திறன் கொண்டவை. சாரதி மற்றும் மூன்று பயணிகள் இதில் பயணம் செய்யலாம். ஒருகலன் (4.5 லீற்றர் பெற்றோலுக்கு 68 மைல் தூரம் செல்லும் திறன் கொண்டது." - என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது.

(க-3)

# காஞ்சி மடத்தின் புதிய சங்கராச்சாரியாராக இளையவர் விஜேந்திரர் பதவியேற்பார்!



காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் முகாமையாளர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள காஞ்சி சங்கராசசரியார் ஜெயேந்திரரின் இடத்துக்கு இளைய சங்கராச்சாரியாரான விஜேந்திரர் புதிய மடாதிபதியாக விரைவில் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொலை வழக்கில் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சங்கராச்சாரியார் ஜெயேந்திரருக்கு பிணை வழங்கப்படவில்லை. வழக்கை சட்டப்படி எதிர்கொள்வதற்கு அவர் தயாராகி விட்டார். தனது வழக்கறிஞர்களுடன் நேற்றுமுன்தினம் பேசிய அவர், சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தன்மீது சுமத்தப்பட்டுள்ள பழி நீங்கி - தான் நிரபராதி என்று நிருபணமாகி விடுவிக்கப்படும் வரை மடத்தின் பொறுப்புகளில் இருந்து விலகி இருப்பதற்கு ஜெயேந்திரர் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது இடத்துக்கு மடத்தின் இளைய மடாதிபதியான விஜேந்திரர் விரைவில் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மற்றொரு முக்கிய சமய பீடமான சாரதா பீடத்தின் நிர்வாகி ஸ்வரூபானந்தத் சரஸ்வதி சுவாமிகள் கருத்துக் கூறுகையில், விஜேந்திரர் சரஸ்வதி சுவாமிகள் காஞ்சிமடத்தின் 70 ஆவது மடாதிபதி பதவிக்கு அதிகார பூர்வ வாரிசாவர். இவர் தலைமைப் பொறுப்பை ஏற்பதில் எந்தக் குழப்பமும் இல்லை -என்று கூறினார்.

விஜேந்திரர் தற்போது ஆந்திர மாநிலம் மெகப்பூப் நகரில் திரிலோக விஸ்வ கல்யாண யாகம் நடத்துவதற்காகத் தங்கி இருக்கிறார். இதே யாகத்துக்காக அங்கு தங்கியிருந்த சமயமே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், கொலை வழக்கில் மேலும் ஒரு திருப்பமாக காஞ்சி மடத்தின் இளைய மடாதிபதியான விஜேந்திரரின் தம்பி ரகு தமிழகப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் சங்கராச்சாரியாரைக் கைதுசெய்யுமளவிற்குத் தகவல்களைப் பொலீஸாரிடம் கக்கியவரே இவர் தான் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது கைதையடுத்து இளைய மடாதிபதியும் கைதுசெய்யப்படக்கூடும் என்ற அச்சம் பரவியுள்ளது.

அத்துடன், காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் நிர்வாகி சங்கரராமன் கொலை செய்யப்பட்டதற்குக் கூலியாக 30 லட்சம் ரூபாவைக கூலிப் படையினருக்குக் கொடுத்தார்கள் என்று கூறப்படும் தொழில் அதிபர்களையும் பொலீஸார் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள்.

இந்தக் கொலை வழக்கில் சங்கராச்சாரியார் கைதுசெய்யப்பட்டது பற்றி இந்திய மத்திய புலனாய்வுத் துறையினர் (சி.பி.ஐ) விசாரணை நடத்தவேண்டும் என்று காஞ்சி இளைய சுவாமிகள் விஜேந்திரர் கோரியுள்ளார் என்று செய்திகள் வெளியாகின. ஆனால், சங்கரமடம் அதனை மறுத்துள்ளது.

(க-3)

# சாதாரண அரச ஊழியர் ஒருவரை மணக்கிறார் ஜப்பான் இளவரசி?

ஜப்பான் நாட்டின் இளவரசி சாயகோ சாதாரண அரச ஊழியர் ஒருவரைக் காதல் திருமணம் செய்யவுள்ளார். அதன் பின்னர் அவர் அரச குடும்பத்தை விட்டு வெளியேறிவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜப்பானியப் பத்திரிகை ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜப்பான் மன்னர் அகிஹிட்டோ இவரது மனைவி ராணி மிச்சிகோ. இவர்களுக்கு மூன்று வாரிசுகள். இதில் கடைசி மகள் இளவரசி சயாகோ. நோரி என்று செல்லமாக அழைக்கப்படும் இவருக்கு 35 வயதாகின்றது. இவர் டோக்கியோவில் உள்ள காகுஹியின் என்ற தனியார் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது உடன் படித்த யோசிகி குரோடா(வயது-39) என்ற இளைஞனுடன் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் அது காதலாக மாறியது.

வனவிலங்குகள் ஆராய்ச்சியில் இருவருக்கும் மிகவும் ஆர்வமுள்ளது என்பதால் விரைவிலேயே இருவரும் நெருங்கிய காதலர்களானார்கள். யோசிகி குரோடா தற்போது டோக்கியோவில் சாதாரண அரச ஊழியராகப் பணியாற்றி வருகிறார். இளவரசி சாயாகோ பறவைகள் வாழ்க்கை குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளார்.

இவர்களின் காதலுக்கு அரச குடும்பத்தில் இருந்து பச்சைக்கொடி காட்டப்படவில்லை. இருப்பினும் திருமணம் செய்துகொள்வது என்று இருவரும் தீர்மானித்துள்ளனர். அரச குடும்பத்தவர் அல்லாத ஒருவரைத் திருமணம் செய்துகொண்டால் இளவரசி அரச குடும்பத்தை விட்டு விலகவேண்டி ஏற்படும். அதற்கும் சாயாகோ தயாராகவே இருக்கின்றார் என்று அவருக்கு நெருங்கியவர்கள் தெரிவிக்கின்றனர் என்று அந்தப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல் குறித்து அரண்மனை அதிகாரிகள் கருத்துக் கூற மறுத்துவிட்டனர். ஜப்பானில் அண்மையில் பூகம்பம் ஏற்பட்டு 40 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் மன்னர் குடும்பத்தினர் தீவிரமாக இருக்கின்றனர். எனவே, இளவரசி திருமணம் பற்றி டிசெம்பரில் தான் உறுதியான தகவல்கள் வெளியாகலாம் என்று அரண்மனை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகளும் வந்த வண்ணம் இருக்கின்றன.

(க-3)




# ஆட்லறி, விமானத் தாக்குதல் பலூஜாவில் மீண்டும் சண்டை!

சண்டைகள் பெரும்பாலும் ஓய்ந்துவிட்டன என்றும் நகரம் முழுமையாகத் தம்வசமாகிவிட்டது என்றும் அமெரிக்க மற்றும் ஈராக்கியப் படைகளால் அறிவிக்கப்பட்ட பலூஜா நகரில் நேற்று மீண்டும் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஆட்லறி தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் சகிதம் அமெரிக்கப் படைகள் தீவிரவாதிகளின் நிலைகள் என்று அவர்கள் கூறும் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.



இதனையடுத்து பலூஜா சண்டைகள் இரண்டாவது வாரத்துக்குள் பிரவேசித்துள்ளன. தீவிரவாதிகளின் பதுங்கு குழிகளையும் கழிவு நீர் கால்வாய்களையும் இலக்குவைத்து அமெரிக்கப்படைகள் தாக்கின என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், நகரில் தாங்கள் இன்னும் நிலை கொண்டுள்ளோம் - என்று அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நீண்டநாள்களாகத் தீவிரவாதிகளின் வசம் இருந்த பலூஜா நகரை ஒரு வாரமாகத் தொடர்ந்த கடும் சண்டையின் பின்னர் தாங்கள் கைப்பற்றிவிட்டனர் என்று அமெரிக்கப் படையினர் இரு நாள்களின் முன்னர் அறிவித்தனர்.

நகரை விட்டுத் தீவிரவாதிகள் ஓடிவிட்டனர் என்றும், நகரம் தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது என்றும், ஒரு வாரமாக நடந்த சண்டையில் ஆயிரத்து 600 பேரைத் தாங் கள் கொன்றனர் என்றும், அவர்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்றும் அமெரிக்கப் படைகள் தெரிவித்திருந்தன.

ஆனால், அமெரிக்கப் படைகள் நகரின் மத்திய பகுதியை மட்டுமே தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளன என்றும் தெற்குப் புறத்தில் பிரதான வீதிகளில் மட்டுமே அவர்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்துள்ளது என்றும் சுயாதீன செய்திகள் தெரிவித்தன.

நேற்று அங்கு மீண்டும் சண்டைகள் ஆரம்பித்திருப்பது தீவிரவாதிகள் பலூஜாவில் இன்னும் பலமாக இருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர். அமெரிக்கப் படைகள் கூறுவதுபோன்று தீவிரவாதிகள் அங்கிருந்து பின்வாங்கி ஓடிவிடவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

(க-3)



கொக்குவில் இந்துக்கல்லூரியில் மாணிக்கம் - பாக்கியம் ஞாபகார்த்த நூற்றாண்டையொட்டி அமைக்கப்பட்ட இருமாடிக்கட்டடம் கடந்தவாரம் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் மங்களவிளக்கினை மேற்படி கட்டடத்தை அமைத்துக் கொடுத்த 'மாணிக்கம் சுப்பிரமணியம் ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும் கட்டடத்தில் அமைந்துள்ள சுப்பிரமணியம் மண்டபத்தினை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நாடா வெட்டித் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் விருந்தினர்கள் உட்பட ஒருபகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: வலி.வடக்குச் செய்தியாளர்)

# தென்மராட்சியில் அகற்றப்படும் குப்பைகளை தரம்பிரித்துப் பசளையாக்குவதற்குத் தீர்மானம்

சாவகச்சேரி, நவ.16

தென்மராட்சிப் பகுதியில் அகற்றப்படும் குப்பைகளினைத் தரம்பிரித்து அவற்றை பசளைகளாகப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனங்களப்புப் பகுதியில் குப்பை சேகரிப்புகுதக் கட்டடத்தினை அமைப்பதற்கு படைத்தரப்பினர் அனுமதித்துள்ளனர்.

கழிவுப்பொருள்களினை அகற்றுவது தொடர்பான பிரச்சினைகள் நீண்டகாலமாக இப்பகுதியில் நிலவிவந்தது. இப்பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்களை உயர்பாதுகாப்பு வலயமான தனங்களப் வெளிப் பகுதியில் உள்ள கடற்கரைப் பக்கமாகக் கொட்டுவதற்குப் படைததரபபினர் அனுமதி வழங்கியிருந்தனர். ஆனால், அப்பகுதியில் கழிவுப் பொருள்களினை கொட்டுவதால் கடல்நீர் மாசடைவதுடன் சுற்றுச் சூழலும் பாதிப்படையும் என்ற காரணத்தால் அச்செயற்பாடு தாமதம் அடைந்தது.

இதனையடுத்து தென்மராட்சிப் பிரதேச கழிவுகளினை அகற்றுவது தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று சாவகச்சேரி 521 ஆவது படையதிகாரி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில சாவகச்சேரி நகர சபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம், தெனமராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், நகர சுகாதாரப் பரிசோதகர் க.கர்ணன், சாவகச்சேரி வணிகர் கழகத் தலைவர் சு.கி.அருளானந்தம் ஆகியோர் கலந்துகொண்ட னர்.

இக்கலந்துரையாடலின்போது நகரில் கழிவுப்பொருள்களினை அகற்றுபவர்கள் அவற்றைத் தரம்பிரித்து பொலித்தீன் பைகள், கண்ணாடித் துண்டுகள், கம்பிகள் எதுவும் இல்லாதவாறு கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் தகரங்களில் இடுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் துரிதமாக செயற்படுத்தப்படாவிட்டால் சாவகச்சேரி நகரில் கழிவுப்பொருள்கள் தேங்கும் நிலை ஏற்பட்டு நோய்க்கிருமிகள் பெருகும் நிலை ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

(க-203-31)

## மருதனார்மடம் மணிக்கூண்டுக்கோபுர மணிக்கூடு செயலிழந்து காணப்படுகிறது

வலி.தெற்கு,நவ.16

மருதனார்மடம் சந்தியில் இணுவில் லயன்ஸ் கழகத்தினால் மூன்று மாதங்களுக்கு முன்பு திறந்து வைக்கப்பட்ட மணிக்கூண்டு கோபுரத்தின் மணிக்கூடு செயலிழந்து காணப்படுகின்றது.

பல லட்சம் ரூபா செலவில் இராமநாதன் கல்லூரி வளாகத்தினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த மணிக்கூண்டுக் கோபுரம் திறந்து வைக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள்ளேயே செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு மாதங்களாக இக்கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள மணிக்கூடு பிழையான நேரத்தையே காட்டுகின்றபோதிலும், உரியவர்கள் இதனைத்திருத்துவதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து அமைக்கப்பட்ட இந்த மணிக்கூண்டுக் கோபுரத்தின் மணிக்கூட்டைத் திருத்திவேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

(10-86-152)

## கட்டடம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு,நவ.16

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் முன்னர் மின் தறி ஆலை இயங்கிய கட்டடம் தற்போது புனரமைப்புச செய்யப்பட்டு வருகின்றது.

சங்க அலுவலகமும் களஞ்சியத்தின் ஒரு பகுதியும் இக்கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் சு. வைரவநாதர் தெரிவித்தார்.

(10-135)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.16'

நோர்வே நாட்டு நிதியுதவியுடன் 'றீடோ' அமைப்பு நடைமுறைப்படுத்தும் 'பெற்றார் வீட்டுக் கல்வி' வளதாரிகளைக் கௌரவித்துப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 12.30 மணியளவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மானிப்பாய பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10-12)

## விதைகள் வழங்கலில் முறைகேடு; மறுக்கின்றது விவசாயிகள் சங்கம்

யாழ்ப்பாணம்,நவ.16

மறுவன்புலோ பிரதேச விவசாயிகளுக்கு விதைகள் வழங்கியதில் எதுவித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என சாவகச்சேரி மறவன்புலோ விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மறுவன்புலோ பிரதேசத்தில் இராணுவத்தினரால் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்ட இடங்களில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு கமநலசேவை நிலையத்தினால் இலவச உள்ளீடுகள் வழங்கப்பட்டன என்றும் -

இந்த வழங்கலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்றும் கூறப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை என்று சம்மேளனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-203)




சுவிஸ் திரைப்பட விழா - 2004

SWISS film season - 2004

கைலாசபதி கலையரங்கு.
யாழ். பல்கலைக்கழகம்

| | | |
|---|---|---|
| 17.11.2004 | Across the border | 4.30pm |
| 18.11.2004 | A Little colour | 4.30pm |
| 19.11.2004 | Azzurro | 4.30pm |
| 20.11.2004 | Back for more | 10.30am |
| | Utopia Blues | 2.30pm |
| | Escape to pradise | 4.30pm |

ஆங்கில உபதலைப்புகளுடன்
மற்றும் ஒவ்வொரு காட்சியோடும்
குறும்படங்களும் திரையிடப்படும்

அனுமதி இலவசம்

கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்,
ஆசிய திரைப்பட மையம்,
திரிகோண கலை மையம்,
வடக்குக்கிழக்கு மாகாண
கல்வி கலாசார விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
16-11-2004
விஜயகுமார் ஜெனிஷன்



சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த
விஜயகுமார் சுகந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் ஜெனிஷன் தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை
தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா,
பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார்,
அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார்,
கனடாவில் வசிக்கும் ஆசை அக்கா விஜி அனைவரும்
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுப்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (38653)
தகவல்:
[illegible] (அப்பா)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20-04-1970

உதிர்வு 09-11-2002

திதி: 16.11.2004

எங்களை விட்டு மறைந்து ஆண்டுகள்
இரண்டு சென்றாலும் உன் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நீங்காது
நிலைத்து நிற்கும்.

அமரர்
அழகர்சாமி சிவகுமார் (மிக்ஷர் சிவா)

113, சிவன்கோயில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

சிவா விளையாட்டுக் கழகம்

6ஆம் ஆண்டு துன்ப அலைகள்

அன்னை மடியில்
15 - 03 - 1962
(இலங்கை)



ஆண்டவன் பாதத்தில்
13 - 11 - 1998
(சுவிஸ்)

அமரர் செல்லையா சிவாஸ்வரன்

திதி அபரபக்க தசமி 07-11-2004

ஆருயிர் தெய்வமே அப்பா!
ஆறு ஆண்டுகள் சென்றதே மறைந்து
ஆறுதில்லை எங்கள் கண்ணீர்
ஆற்றில்இட்ட தெப்பம் ஆனோம்
உமது ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

(38648)

'செல்வறங்கம்',
இணுவில் மேற்கு,
சுன்னாகம். (26-16-46)

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தாய்,
உற்றார், உறவினர்கள்.

## உதயன்

# விடுதலைப் புலிகளின் காய்நகர்த்தல்

"ஜனாதிபதியுடன் தனித்துப் பேசுவதில் அர்த்த மில்லை. அரசுடன்தான் பேசவேண்டும். எனவே, பல்வேறு கட்சிகளைக் கொண்ட சாம்பார் கூட்டமைப்பான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நிலைப்பாடு - கொள்கை - தெளிவுபடுத்தப்படவேண்டும். ஆகையால் இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளை முன்நகர்த்துவதற்கு வசதியாக அந்த விவகாரம் தொடர்பான அரசின் கொள்கை நிலைப்பாட்டை முதலில் ஒரே குரலில் பிரகடனப்படுத்துமாறு கூறுங்கள்!"

- இப்படி நோர்வே அனுசரணையாளர்களிடம் புலிகள் கோரியிருக்கின்றனர் என்று தகவல் வெளியாகியிருக்கின்றது.

இதுவே, விடுதலைப் புலிகள் கடைசியாக நோர்வேத் தரப்பு ஊடாக அரசுக்கு அனுப்பிவைத்த பிந்திய செய்தியின் சாராம்சம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தென்னிலங்கை மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் விதத்தில் இரட்டைவேடம் போடும் அரசுத் தரப்பின் முகமூடியைக் கிழித்தெறியும் வகையில் இந்த நடவடிக்கை மூலம் நல்லதோர் இராஜதந்திர காய்நகர்த்தலைச் செய்திருக்கின்றார்கள் புலிகள்.

பேரினவாதிகளைக் கூட்டுச் சேர்த்து அவர்களின் ஆதரவோடு அரசு அமைத்திருக்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

சர்வதேச சமூகத்துக்கு அவர் ஒரு வேடம் போடுகின்றார், விடுதலைப் புலிகளுக்கு இன்னொரு வேடத்தைக் காட்டுகின்றார். அதேசமயம் அவரது கூட்டமைப்பின் சகாக்கள் தென்னிலங்கை மக்களுக்குப் பிறிதொரு வேடத்தைக் காட்டுகின்றார்கள்.

இப்படி ஆளுக்கும், இடத்துக்கும், நேரத்துக்கும் தகுந்த மாதிரி வெவ்வேறு முகங்களையும், வேடங்களையும் காட்டும் இந்தக் கூட்டமைப்பு அரசுக்கு அமைதி முயற்சிகளில் நேர்மையுடன் - இதய சுத்தியுடன் - ஈடுபடும் உண்மையான எண்ணம் இல்லை. தமிழருக்கு உரியதை உரிய முறையில் - வழங்கும் நேர்மையான மனப்போக்கு இந்த அரசுக்கு இல்லை என்பது தமிழர் தரப்புக்கு நன்கு தெரியும். ஏதோ அமைதி முயற்சிகளில் ஈடுபடும் நன்நோக்கு அரசுத் தலைமைக்கு உள்ளது என்பது போல சர்வதேச சமூகத்துக்கும் நாட்டுக்கும் போக்குக் காட்டிக்கொண்டே ஆட்சியை இழுத்துச் செல்வதுதான் பேரினவாதிகளை அரவணைத்து அரசு அமைத்துள்ள ஆட்சித் தலைவியின் திட்டம் என்பது - அதுதான் அவரால் இயன்ற விடயம் என்பதும் கூட - தமிழர் தரப்புக்கு நன்கு தெரியும்.

இந்த முகமூடியைக் கிழித்தெறிந்து உண்மையை சர்வதேச உலகத்துக்கும் அம்பலப்படுத்த புலிகளின் பிந்திய கோரிக்கை வழி சமைத்திருக்கிறது.

இரட்டைவேடம் போட்டு - மூன்று முகம் காட்டி - நான்கு கதை பேசி - நாட்டையும், சர்வதேசத்தையும் ஏமாற்றாமல் இனப்பிரச்சினை விடயத்தில் அரசின் நிலைப்பாடு இதுதான் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கும் ஏக பிரகடனத்தைப் பகிரங்கமாக வெளியிடும்படி கோரியிருக்கின்றார்கள் புலிகள்.

ஆனால், அந்தக் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்து பதிலேதும் இல்லை. அவரிடம் இருந்து பதில் வரவேவராது.

ஜனாதிபதியிடம் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று உள்ளது. அரசியல் அதிகாரத்தில் அவரைத் தொடர்ந்து தக்கவைத்திருக்கும் அம்சங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும், நகர்வுகளுக்கும் முன்னுரிமை கொடுத்துத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் அது. அதை செம்மையாகச் செயற்படுத்துவதற்கு அவரின் ஆட்சி அதிகாரம் இப்போது உறுதியாக நிற்க வேண்டும். அமைதி முயற்சிகளில்-சமாதானத் தீர்வில்- ஈடுபாடு உள்ளவர்போல் சர்வதேச சமூகத்துக்கும் நாட்டுக்கும் தன்னைக் காட்டிக்கொண்டால்தான் தனது ஆட்சி அதிகாரம் உறுதியாக நீடிக்கும் என்று அவர் கருதுகின்றார். அதேசமயம் ஆட்சிப் பங்காளி களான - பௌத்த, சிங்களப் பேரினவாதிகளான- ஜே.வி.பி. போன்ற தரப்புக்களைப் பகைத்துக்கொள்ளவும் அவர் விரும்பவில்லை. பகைத்தால் தமது அரசு அதிகாரம் அடுத்த விநாடியே கவிழ்ந்துவிடும் என்ற யதார்த்தமும் அவருக்கு நன்கு தெரியும்; புரியும்.

அதனால் இரண்டுக்கும் நடுவில் அவர் காய்நகர்த்தப் பார்க்கிறார். அதற்கு 'செக்மேட்' (Checkmate) வைத்திருக்கிறார்கள் புலிகள்.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் வகையில் தமிழருக்கு உரிய அதிகாரங்களை அவர்களுக்குப் பகிர்வதே வழி என்பதைத் தெளிவுபடுத்தி அதை அரசின் கொள்கைப் பிரகடனமாக வெளியிட்டால் அரசின் காலைப் பேரினவாதிகள் வாரிவிடுவார்கள். அதற்கு மாறாக அரசின் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டால், தமிழர் தரப்பும் சர்வதேச சமூகமும் அதனால் சீற்றமடையும்; ஈழத் தமிழரின் உரிமைப்போராட்டம் சர்வதேச சமூகத்தின் முன்னால் நியாயப்படுத்தப்பட்டுவிடும்.

ஆகவேதான் புலிகளின் இந்த காய்நகர்த்தலுக்குப் பதில்கூறமுடியாமல் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

# நாவற்குழி-தனங்களப்பு-சாவகச்சேரி வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்துவிடக் கோரிக்கை

## மாவட்ட சமூகப் பாதுகாப்புக் குழு விடுத்துள்ளது

யாழ்ப்பாணம்,நவ.16

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள நாவற்குழி - தனங்களப்பு - சாவகச்சேரி ஊடான போக்குவரத்து வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்துவிடுமாறு மாவட்ட சமூகப் பாதுகாப்புக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மனித உரிமைகளை மேம்படுத்தலுக்கும், பாதுகாத்தலுக்குமான மாவட்ட சமூகப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இடம்பெற்றது.

மேற்படி அமைப்பின் தலைவர் எம். ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் யாழ்.-முகமாலை ஊடான போக்குவரத்துச் சீர்கேடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

இப்போக்குவரத்துப் பாதையிலுள்ள பிரதான பாலமாகவுள்ள கைதடிப் பாலம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. அதனால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீதியூடாகப் போக்குவரத்து இடம்பெற்று வருகிறது. ஆனால், தற்போது தொடர்ந் பெய்துவரும் மழை காரணமாக அப் பாதையினூடாகப் போக்குவரத்தினை மேற்கொள்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைத் தவிர்க்கும் முகமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள நாவற்குழி - தனங்களப்பு - சாவகச்சேரி வீதியை மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றினர்.

அங்கு மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள் பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

★ மழை நீர் அநாவசியமாகக் கடலுடன் கலப்பதைத் தடுத்து குடிதண்ணீருக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ கடந்த கால யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நலன்புரி நிலையங்களிலுள்ள வீடுகளில் மழைவெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களுக்கு வேண்டிய உதவிப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீள அனுமதிக்குமாறு கோரி வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய பகுதிகளில் விழிப்புணர்சிப் போராட்டங்களை நடத்துதல் -

எனப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (10-5)

# பொது அமைப்புகள் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.16

கொடிகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவ பவுஸர் மோதி இளைஞன் ஒருவன் பலியான சம்பவத்தையும், அதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர், பொது மக்கள் ஆகியோர் தாக்கப்பட்டதையும் கண்டித்து பல்வேறு பொது அமைப்புக்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம், தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம உட்படப் பல பொது அமைப்புக்களும் இக்கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இத்தாக்குதல் சம்பவம் ஊடகவியலாளர் உரிமைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் செயற்பாடாகவும் சமாதானச் சூழலுக்கு பங்கம் விளைவிக்கும் செயலாகவும் அமைகின்றது என்று யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மீண்டும் ஒரு யுத்தத்தை உருவாக்குவதற்கான நோக்கமாக இச்சம்பவம் அமைந்துள்ளது என்று தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கூறியுள்ளது. (10-202)

# லஞ்ச ஊழல் ஒழிப்புத் தொடர்பாக சத்தியப்பிரமாணம் அடங்கிய பிரகடனம்

### வெளியிடப்படவுள்ளதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழுப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு,நவ.16

லஞ்ச ஊழலை ஒழிப்பது தொடர்பாக சுமார் 8 லட்சம் அரச ஊழியர்கள் கடைப்பிடிக்கக் கூடிய சத்தியப்பிரமாணங்கள் அடங்கிய பிரகடனம் ஒன்றை ஜனவரி மாதம் 3ஆம் திகதி வெளியிட லஞ்ச ஊழல் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்வதாக அதன் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சமுதாயத்தில் லஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல் உன்னதமான அரச பணியினை மேற்கொள்ளும் பரம்பரையொன்றைக் கட்டியெழுப்புதல் ஆகிய நோக்குடன் இப் பிரகடனம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இப்பிரகடனத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி, நடைமுறைப்படுத்துமாறு சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பொதுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோரிடம் அரசமைப்புச் சபையின் முக்கியஸ்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (10-202-ரி)

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகள் 29இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

வாய்மொழிப் பரீட்சைகள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைகளுக்குரிய நேர அட்டவணையை இன்று செவ்வாய்க் கிழமை முதல் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

பரீட்சார்த்திகள், மீள்பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை அனுமதி அட்டைகளை எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக் கிழமை முதல் -யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

எதிர்வரும் 21ஆம் திகதி மூன்றாம் தவணை விடுமுறைக்காக யாழ். தொழில நுட்பக் கல்லூரி மூடப்படவுள்ளது.(10-12)

# நாவலர் குருபூசையைக் கொண்டாட சைவபரிபாலன சபையினர் ஏற்பாடு

வலி.தென்மேற்கு,நவ.16

யாழ்.சைவ பரிபாலன சபை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 125 ஆவது குருபூசை தினத்தை அடுத்தமாதம் 4 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நேற்றுமுன்தினம் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என இப் பேச்சுப்போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டது.

கட்டுரைப்போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளதாக சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும முதல் மூன்று இடங்களைப்பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படவுள்ளது. 2-ஆம், 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே வெள்ளிப் பதக்கமும், வெண்கலப்பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இப்பரிசில்கள் யாவும் அடுத்த மாதம் யாழ்.நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வைத்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (10-135)

# மகளிர் பணியகத்தின் ஏற்பாட்டில் வன்செயல்களுக்கு எதிரான கருத்தரங்கு

வலி.கிழக்கு,நவ.16

இலங்கை மகளிர் பணியகத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்செயல்களைத் தடுத்தல் தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தலைமயில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி சறோஜா சிவச்சந்திரன், சாந்திகத்தைச் சேர்ந்த இர.சந்திரசேகரசர்மா ஆகியோர் கருத்துரைகளை நடத்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராமிய மட்டப் பிரதிநிதிகள் மற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10-180-202)

## நாளை

கார்த்திகை 02
புதன்கிழமை
(17.11.2004)
திதி: பஞ்சமி
முற்பகல் 9.39 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு 2.53 வரை
சுபநேரம் : 04.38 - 6.08
ராகுகாலம் : 12.08 - 1.38
சதுர்த்தி விரதம்
(பழைய நேரப்படி)

# செங்கண்மாரி - 'பி' பரவுவதை தடுப்பதற்கு விசேட திட்டம்

இளவாலை,நவ.16

செங்கண்மாரி நோய் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மூன்று கட்டங்களாகத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

செங்கண்மாரி 'ஏ' ஆனது உணவு, நீர் மூலமும், செங்கண்மாரி 'பி' ஆனது பாலியல் தொடர்புகள், குருதிப் பரிமாற்றம், சவர அலகுகள் போன்றவற்றாலும்(HIV) பரவும் வழிகளில் பரவி வருகின்றது. இதனைத் தடுப்பதற்பாகத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஜனவரி மாதம் முதல் செங்கண்மாரி - B (Hepatitis-B) தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. இது 3 கட்டங்களாக வழங்கப்படவுள்ளது.

2,4,6 வயது பூர்த்தியான குழந்தைகளுக்கு முக்கூட்டு வக்சீன் மற்றும் போலியோ சொட்டு மருந்துடன் இவை வழங்கப்படவுள்ளன.

இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் சுகாதார உத்தியோகத்தர்களூடாக யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.(ஐ-8)

## உதயவாக்கு

ஊர் அறிய விழுந்தவன் மட்டும் நகைக்கப்படுகிறான். மற்றவன் தப்பித்துக்கொள்கிறான்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Doberman Pincher நாய்க்குட்டிகளும் ஒரு வருட அல்ஷேசன் நாயும் விற்பனைக் குண்டு. தொடர்பு: தி. நடராஜா, சட்டத்தரணி, டச்றோட், தொல்புரம், சுழிபுரம். (38638)

வகை வகையான சாடிகள், குறோட்டன் பாம்ஸ், செவ்வரத்தை என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப் பாணம். T.P.: 222 6363. (38645)

## கோழிக்குஞ்சு விற்பனை

Origional Prima Broiler மற்றும் பேட் டுககுஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. க.தன பாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (38594)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டுமுறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broi ler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 15.11.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித் துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஜங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்றர் - 19, முரு கேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (38466)

## வாடகைக்கு

இல.82, K.K.S. வீதி, சுன்னாகம் சந்திக்கு அருகில் கடையொன்று வாடகைக்குக் கொடுக கப்படும். தொடர்பு: S.சபேசன், வங்களா லேன், மல்லாகம். (38643)

## சேவை

55,000 அமெரிக்க நிரந்தர குடியேற்ற விசா (Green Card) விண்ணப்ப விவரம் இல வசமாகப் பெற Internet மூலம் USA இறகு அனுப்பி Receipt பெற நாடுங்கள். PENG UIN B2/F23, Bloemendhal, colombo-13 T.P.: 2438367, 077 3081764. (சி-38978)

## காணி விற்பனைக்கு

கலாசாலை வீதியில் திருநெல்வேலி வைர வர் கோயில் ஒழுங்கையில் வீட்டுடன் 20பரப் புக் காணி, கிணறு, குழாய்க்கிணறு, மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. எதிர்பார்க்கப் படும் விலை 45 லட்சம். விரும்பியவர் மட்டும் தொடர்புகொள்ளவும். திருமதி சிவகுமார் 222 7366 (மாலை 3மணிக்குப் பின்னர்) (38641)

## தவறிவிட்டது

கெ.இ.றொகான் என்பவரது தே.அ.அட்டை (820920503V), சாரதி அனுமதி அட்டை மற் றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய மணிப் போஸ் ஒன்று பாரதி வீதிக்கும், கோயில் வீதிக கும் இடையில் 06-11-2004இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 156, கோயில் வீதி, யாழப்பாணம் (T.P.: 0777 239885) எனும் முகவரி யுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங் கப்படும். (38646)

பலாலி வீதி, உரும்பிராய் மடத்தடி, கதிர் ஜின் அக்குபஞ்ஷர் வைத்தியரின் வீட்டிற்கும் பலாலி வீதி, மயிலங்காடு வீதிக்குமிடையில் பொக்ஸ் செயின் ஒன்று காணாமற்போய்விட் டது. கண்டெடுத்தவர்கள் அக்குபஞ்ஷர் வைத் தியரிடம் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (38647)


## உடனடியாக வீடு வாடகைக்குத் தேவை

எமது திணைக்களத்துக்கு அலுவலகம் நடத்தக்கூடிய வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. மாநகர எல்லையினுள் இருப்பது நல்லது.
அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்**
**180, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல. 222 2387.
(சி-39047) (26-19-44)

"உயர் கல்விக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு"

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்து கொள்ளுங்கள்



காலம் - 20.11.2004
இடம் - MPCS கேட்போர் கூடம், K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் - காலை 10 மணி - 12 மணிவரை

★ குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படவிருப்பதால் முற்கூட்டியே எமது நிலையத்தில் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

**Dr. M.G.R. Deemed University**
Offshore Campus Information and Admission Centre
No.195, Navalar Road, Jaffna, T.P.: 021-222 2840


# மரண அறிவித்தல்

## வரதராஜக்குருக்கள் அரிகரசர்மா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட வரதராஜக்குருக்கள் அரிகரசர்மா 14-11-2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் கல்வியங்காடு வீரபத்திரர் கோயில் பிரதமகுரு பொ.வரதராஜக்குருக்கள் - விக்னேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல் வனும் கேதீஸ்வரசர்மா (சமுர்த்தி முகா மையாளர், பிரதேச செயலகம் - நல்லூர்), நகுலேஸ்வரக் குருக்கள் (கட்டப்பிராய், முத்துமாரி அம்மன்), திவாக ரேஸ்வரக் குருக்கள் (லண்டன்), கோகிலவாணி (யாழ்.பல்கலைக் கழகம், நுண்கலைப்பிரிவு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வதனா, கல்பனா, வதனி ஆகியோரின் மைத்துனரும் பவித்திரா, அபிஷா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (16-11-2004) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.வரதராஜக் குருக்கள் (தந்தை).
வீரபத்திரர் கோயில் வீதி, கல்வியங்காடு. (38644) (26-19-44)

# மகரஜோதிப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.16

கோண்டாவில் சபீச ஐயப்பன் தேவஸ்தானத தின் வருடாந்த மகரஜோதிப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 60 நாள்களுக்கு நடைபெறவுள் ளது. (10-202)

## பசுமாடு ஏலத்தில் விற்பனை

யாழ்ப்பாணம்,நவ.16

கோண்டாவில் ஜே/116 கிராம அலுவலர் அலுவலகத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கட்டாக் காலி பசுமாடு பகிரங்க ஏலத்தில் விற்கப் படவுள்ளது.

இக்கிராம அலுவலர் பிரிவில் பிடிக்கப்பட்ட ஒரு கட்டாக்காலி பசுமாடு இதுவரையி லும் உரிமை கோரப படாததாலேயே ஏலத் தில் விற்கப்படவுள்ள தாக நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு. தெய்வேந்திரம் தெரி வித்துள்ளார். (10-202)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலி. வடக்கு பிர தேச செயலக பிர தேச ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டம் இன்று காலை பதது மணிக்கு பிரதேச செய லக மாநாட்டு மண்ட பத்தில் உதவிப் பிர தேச செயலர் எஸ். முரளீதரன் தலைமை யில் நடைபெறவுள் ளது. (10-152)

## பொலீஸாரினால் தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ் நகரப் பகுதி யில் வாகனங்கள் நிறுத்த அனுமதி மறுக்கப்பட்ட இடங் களில் நிறுத்திவைக் கப்பட்டிருந்த மோட் டார் சைக்கிள்களுக் குப் பொலீஸார் தண் டப் பணம் விதித்த னர்; சைக்கிள்களுக்கு காற்றை அகற்றிவிட் டனர்.

நேற்று நண்பகல் ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்திவைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கள், சைக்கிள்கள் ஆகியவற்றுக்கே இந் நிலை ஏற்பட்டது.

கொட்டும் மழைக் கும் மத்தியில் போக்குவரத்துக் கண் காணிப்புப் பொலீ ஸார் இந்த நடவடிக் கையை மேற்கொண் டனா. இதனால், பொது மக்கள் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். (10-12)

# வலி.தென்மேற்கில் அடுத்த ஆண்டு ஒன்பது திட்டங்களுக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,நவ.16

2005ஆம் ஆண்டில் முக்கிய 9 வேலைத் திட்டங்களை வலி.தென்மேற்குப் பிரதேச சபை முன்வைத்துள்ளது.

முன்வைக்கப்பட்ட 9 கருத்திட்டங்களும் வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து பிரதேச செயலி னால் அங்கீகரிக்கப்பட்டன.

அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் வருமாறு:-

☆ பழைய இறங்குதுறையில் (நவாலி) கொல்களம் அமைத்தல்.

☆ மானிப்பாய் பட்டின பொது நூலகம் திருத்துதல்.

☆ ஆனைக்கோட்டை கிராம பொது நூல கம் திருத்துதல்.

☆ முள்ளானை கலைவாணி சனசமூக நிலையம் மீள்புனரமைப்பு.

☆ சங்கானை ஆஸ்பத்திரி வீதி மீள்புனர மைப்பு.

☆ இணுவில் - சுதுமலை மடத்தடி வீதி மீள்புனரமைப்பு.

☆ மானிப்பாய் பட்டினசபை உப - அலுவல கம் திருத்துதல்.

☆ நவாலி செ.ன்.பீற்றர்ஸ் வீதி மீள் புனரமைத்தல்.

☆ நவாலி வடக்கு - குதனை வீதி மீள்புனரமைப்பு.

(ஐ-185)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.16

இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவ லகம் நடத்தும் கந்த சஷ்டி விரதகாலச் சிறபபுச் சொற்பொழிவு கள் நல்லூர் ஆலய முன்றிலில் உள்ள நாவலர் மணிமண்ட பத்தில் தினமும் மாலை 6மணி முதல் 7மணி வரை நடை பெற்று வருகின்றன.

சிவத்தமிழ் வித் தகர் சிவ.மகாலிங் கம் தலைமையில் நடைபெற்றுவரும் இந் நிகழ்வில் இன்று 'திருப் புகழ்' என்னும் தலைப் பில் சைவப்புலவர் நித் தியதசீதரனும் நாளை புதன்கிழமை 'கந்த ரனுபூதி' என்னும் தலைப்பில் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல் லூரி ஆசிரியர் சலஸீ னும் சொற்பொழி வாற்றுவர். (10-202-203)





முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்
License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240
சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5
பெக்ஸ்: 2448554
WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்
Access Graphics
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.


DANISH DE-MINING GROUP DDG

# VACANCY

## House hold Survey/Field Officer

Danish Demining Group is an NGO currently engaged in humanitarian de-mining in the Northern and North Eastern Provinces of Srilanka. The organisation is currently employing some 275 persons in different positions. The organisation is expanding its activities in Srilanka and a social survey team (cell) is now to be established. We are therefore hoping to see your application.

The survey Section where you will be located will be using the National Information Management System for mine Action(IMSMA) geodata base and a house hold survey database. The geodatabase will contain data on mine clearance activities and household survey data in the close vicinity of our operations. The section will consist of a total of 4 persons where you may be one of them. You will refer directly to the liaison officer, and work closely together with the Geographical Information System (GIS) section that is already established as part of the Survey Section.

**Your main tasks will be the following :**
To interview house holds before and after mine clearance has taken place.
To analyse house hold data.
To review the findings of the house hold survey
To obtain and maintain the data in the geodatabase.

**You must answer yes to these questions:**
Willingness to live in Vavuniya, where we have our operational base.
Fluency in Tamil and English
Ability to travel all over the NorthEast
Capable of spending nights at a field camp living in a tent, if necessary.

**Essential qualifications:**
Relevant background in social studies or geography.
Some experience in conducting social surveys.
Qualitative and quantitative methodology.
Experience of working in rural areas.
Strong written and oral communication skills in English and Tamil.
Must have excellent knowledge of computers and preferable GIS.
Good team work skills. Ability to listen, to consult and to share information and ideas. Physically fit to under take frequent travel.
Be able to work independently under minimal supervision.

**Desirable Qualifications:**
Experience in using ArcGIS8.x&ArcEditor 8.x(ESRI)
Ms Access
Skills in semi-structured interviewing as well as managing group discussion.
Sensitive communication style and respect for gender equity.
Experience of monitoring and in logframe analysis

We are employing two persons and we hope to see applications from both male and female candidates. Your title will largely depend on your qualifications or on your level of education, as will your initial salary level. The initial contract will be half a year, but the Survey section is expected to remain in work for at least 2 years, so there is a definite option to stay longer with the organisation. If you have any questions feel free to contact the liaison officer on e-mail: liaisonofficer@ddg.lk.

Please submit your written application which should explain why you are interested in this post as well your biodata before 22 November 2004 by e-mail:liaisonofficer@ddg.lk or by postal mail to:

**Danish Demaining Group**
**Att:Camilla Madsen 3173A, Sulaiman Terrace, Colombo - 05.**

# சூரியகாந்தியைச் செய்கை பண்ணி எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கலாம்



இலங்கையைப் பொறுத்தவரையில் நாம் எமது சமையல் தேவைகளுக்குப் பாவிக்கும் எண்ணெய்வகைகளில் கூடுதலானவற்றை பிறநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கின்றோம். இதை நாம் வழக்கமான நடைமுறையாகக் கொண்டிருக்கின்றோம். இங்கு உற்பத்தி செய்ய முடியாததை இறக்குமதி செய்தால் அதனைத் தவறு எனக்கூறமுடியாது. இந்தவகையில் இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய பல பொருளகளை நாம் தொடர்ந்தும் இறக்குமதி செய்துகொண்டுதான் இருக்கின்றோம். எமது நாடு பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையாததற்கு இதுவும் ஒரு காரணியாகும்.

இன்று எமது மக்கள் தாவர எண்ணெய் வகைகளைப் பயன்படுத்தி உணவு தயாரிப்பது சர்வசாதாரணம் என்பதோடு, அதன் பயன்பாடும் அதிகமாகவே உள்ளது. எமது நாட்டில் பலதரப்பட்ட எண்ணெய் வகைகள் விற்பனையில் உள்ளன. அதேவேளை, இறக்குமதி செயயப்படும் எண்ணெய் வகைகள் எல்லாம் தரமானவை என உற்பத்தியாளர்களினால் பாரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டாலும் அவற்றில கூடுதலானவற்றில் பாம் ஒயில் (Farm Oil) கலந்து உள்ளமை பலருக்குத் தெரியாது. சமையல் தேவைகளுக்குக் கூடுதலாக சமையல் எணணெய் (Cooking Oil) பாவிப்பது கொலஸரோல தாக்கத்தில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கேயாகும்.

தேங்காய் எண்ணெயில் உள்ள கொழுப்புத் தன்மையானது சொகுசு வேலைகளில் ஈடுபடுபவர்களை இலேசாகப் பீடிக்கும். எது எவ்வாறாயினும் இலங்கை மக்கள் பாவிக்கும் எண்ணெய் வகைகளில் கொழுப்புத் தன்மை அதிகம் உள்ளது கண்கூடு. இந்தவகையில் எமது மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற இடமில்லை.

இலங்கையில் பயிர்வகைகளைச் செய்கை பண்ணக்கூடிய செழிப்பான விளைநிலங்கள் ஏராளம் உண்டு. உணவுக்காகத் தேவைப்படும் எண்ணெய்ப் பயிர்களை இங்கு நாம் வெற்றிகரமாக அதிக பணச்செலவு இன்றி உற்பத்தி செய்யலாம். இந்தவகையில் நாம் தற்சமயம் எமது நாட்டுக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யும் சூரியகாந்தி எண்ணெய் (Sun Flower Oil) நூறு மில்லியன் தொன் எனக் கூறப்படுகின்றது. இப்படி இறக்குமதி செய்யப்படும் சூரியகாந்தி எண்ணெய் சார்பான பயிரை நாம் மிகவும் செழிப்பாக இங்கு பயிரிட முடியும். இதற்குத் தேவை எமது விவசாய பொதுமக்களின் ஒத்துழைப்பேயாகும். சூரியகாந்திப் பயிர்களுக்கு கிருமிநாசினி, களைநாசினி எதுவும் பாவிக்கவேண்டிய தேவை இல்லை. கால்நடைகள் மூலமோ அல்லது வேறு காரணிகள் மூலமோ இவற்றிற்கு அழிவு ஏற்படும் சந்தர்ப்பங்கள் ஏதும் இல்லை. சூரிய ஒளி மட்டுமே தேவை பசளைத் தேவையும் இல்லை. சொற்ப நீர்ப்பாசனம் மட்டும் இதற்கு போதுமானது. சூரியகாந்திப் பயிர் அறுவடையின் பின்னர் இம்மரத்தை மண்ணுக்கு உரமாக இடலாம். அடுதத போகச்செய்கைக்கு இவை பசளையாகப் பயன்படும். இலங்கையில் பயிரிடக்கூடிய இனம RK 49 ஆகும். இலங்கையிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வர்க்கம் சுமார் 4 அடி வரை வளரும். இது காற்றுக்குத் தாக்குப்பிடிககும் தன்மைகொண்டது.

சூரியகாந்தி மரம் ஆறு, ஏழு அடிவரை வளரும் சந்தர்ப்பங்களில் இதற்கு ஆதாரமாக தடிகள் மூலம் முண்டு கொடுக்கவேண்டும். ஓர் ஏக்கருக்குப் பயிரிட ஆயிரம் கன்றுகள் தேவை. ஆர்.கே. 49 வர்க்கம் இலங்கையில் அதிகம் விளைச்சல் தரும் இனம் என்பதுடன் இவ்வர்க்கத்தில் அதிக எண்ணெய்த் தன்மையுள்ளது. இவ்வர்க்கத்தில் 48 வீதம் எண்ணெய்த தன்மை உள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மற்ற இனங்களில் 28 வீதமே உள்ளது.

பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சூரியகாந்தி எண்ணெய்ப்போத்தல் ஒன்று ரூபா 225 ஆகும். இது அதிக விலையாகும். உணவுத் தேவைக்குத் பயன்படும் எண்ணெய்ப் பயிர்களை உற்பத்திசெய்ய இங்கு வசதிகள் ஏராளம் உண்டு. அப்படியான நிலை இருக்கும்போது அவற்றைப் பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அதிக பணச்செலவு செய்வதில் அர்த்தம் ஏதுமில்லை. இலங்கையில் இப்பயிர்வகைகளை உற்பத்திசெய்து இங்குள்ள தொழிற்சாலைகளில் இந்த எண்ணெய்யை உற்பத்திசெய்து பாவனையாளர்களுக்கு போததல் ஒன்று ரூபா 175 இற்கு விற்பனை செய்ய முடியும்.

தற்சமயம் இலங்கையில் சிறிய அளவில் சூரியகாந்திப் பயிர் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனைப் பாரிய அளவில் செய்கை பணணும் போது ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் - எமது உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யவும் இடமுண்டு. சமையல் எண்ணெய் பாவிப்பதன் பிரதான நோக்கம் கொலஸ்ரோலில் இருந்து பாதுகாத்தலே ஆகும். இலங்கையில் உற்பத்தி செய்யும் தாவர எண்ணெய் வகைகளில் பாம் ஒயில் கலப்பு இல்லை. பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெய் வகைகளில்தான் (Farm oil) பாம் கலப்பு உள்ளது. நாம் எமது நாட்டில இவற்றை உற்பத்தி செய்வதில் கூடுதலான அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியும்.

எமது நாட்டுக்கு அண்மையில் உள்ள இந்தியாவில் சூரியகாந்தி விதைக்கு அதிக கிராக்கியுண்டு. அங்கு சூரியகாந்தி எண்ணெயில் இருந்து 'வனஸ்பதி' என்னும் பெயரில் உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் இந்திய நிறுவனங்கள் இங்கிருந்து இவற்றை இறக்குமதி செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

இந்தியாவுக்கு இவற்றை நாம் ஏற்றுமதி செய்யவேண்டும் என்றில்லை. எமது நாட்டில் இப்பயிரை உற்பத்திசெய்து இதன் மூலம் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி எமது நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்வோமானால் இது விடயத்தில் நாம் பெருமை கொள்ளவேண்டும். எனவே, எமது நாட்டு விவசாயிகள் சூரியகாந்திப் பயிரை பயிரிட்டு அதன் மூலம் எண்ணெய் உற்பத்தியை பெருக்கி வாழ்வில் முன்னேறுவோம். ☆

தொகுப்பு: எஸ்.அருணாசலம்
வரணிச் செய்தியாளர்

**கமமும் புலமும்**
தயாரிப்பு: ஜெயஸ்ரீ




யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியின் விவசாயப் பிரிவினால் அதன் பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் அண்மையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவச்சந்திரன் உரையாற்றுவதையும், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் - தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்றுகளை வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (10-190)

விவசாயத் திணைக்கள வளாகத்தில்

## தொழில்நுட்ப அறிவை வழங்கும் முன்மாதிரி அமைப்பு உருவாக்கம்

வலிகாமம் தெற்கு, நவ.16

புதிய தொழில்நுட்ப அறிவை வழங்கும் நோக்குடன் முன் மாதிரியான அமைப்பு ஒன்று கண்ணொறுவையிலுள்ள விவசாயத் திணைக்கள வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், விவசாய அமைப்புக்கள், பாடசாலை மாணவர்கள், உயர் கல்வியைத் தொடரும் மாணவர்கள், விரிவாக்கல் மற்றும் ஏனைய கள உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு மிக இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும், கவர்ச்சிகரமானதாகவும், பிரயோகிக்கக் கூடியதாகவும் இவ்வமைப்பு விளங்குகின்றது.

இவ்வமைப்பு "விவசாய பல்கூட்டுத் தொகுதி" என அழைக்கப்படும்.

இலங்கையின் விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமாக விவசாயத் திணைகளம் பேராதனை, கண்ணொறுவை விவசாயப் பங்கு கூட்டுத்தொகுதி-சிறந்த ஒரு மத்திய நிலையமாகவும் விளங்கும்.

ஏற்றுமதி விவசாய திணைக்களம் பேராதனைப் பல்கலைக்கழக விவசாயத் திட்டம் ஆகிய நிறுவனங்களின் தொழில்நுட்ப உருவாகல் நடவடிக்கைகள், விரிவாக்கல் நடவடிக்கைகள் இக்கூட்டுத் தொகுதிக்கு அருகில் நடைபெற்றுவருகின்றன.

மரக்கறிச் செய்கை பற்றிய புதிய சிபார்சுகள், சூழல் பயிர்ச்செய்கை முறை, புதிய தொழில்நுட்பப் பரிசோதனைகள், விவசாய உணவுபதனிடல், நோய், பீடைத்தாக்கம், பயிர்ப்பாதுகாப்பு, விலங்கு உற்பத்தி நடவடிக்கைகள் போன்ற பல பகுதிகளை உள்ளடக்கியதும் ஆராய்ச்சிகளுக்கு இடம் அளிக்கக் கூடியதுமாகவும் தற்பொழுது இந்த அமைப்புத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விவசாய நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் மாணவர்கள் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இங்கு வந்து பார்வையிடவும், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் முடியும் என விவசாயத்திணைக்கள வர்த்தகப் பயிறசிப் பிரிவு தொழில்நுட்ப பல்கூட்டுத்தொகுதி பயிற்சி ஒருங்கிணைப்பு அதிகாரி அறிவித்துள்ளார்.

(10-152)

தொடர்ந்து பெய்துவரும் மழையினால்

## கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்கள் உப உணவுப் பயிர்கள் என்பன முற்றாக அழிவு

பரந்தன்,நவ.16

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழைகாரணமாக பெரும்போக நெற்செய்கை மற்றும் உப உணவு உற்பத்தி எனபன பல இடங்களில் முற்றாக அழிந்துள்ளன.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் பெரும்போக நெற்செய்கை பாதிப்புற்ற இடங்களில் பயிர்க் காப்புறுதி மேற்கொண்ட இடங்களில பயிர் அழிவு நஷ்டஈடு வழங்குவதற்குத் தீர்மானிததுள்ள போதும் -

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்க்காப்புறுதித் திட்டத்தைச் செயற்படுத்த அரச திணைக்கள அதிகாரிகள் மற்றும் கமக்கார அமைப்பினர் முன்வராத காரணத்தால் பயிர்க்காப்புறுதி மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 2004/2005 பெரும்போகத்தில் உற்பத்திப் பயிர்களுக்கு மழை காரணமாக ஏற்பட்ட இயற்கை அழிவுக்கு நிவாரணம் தருவார்களா என விவசாயிகள் ஏக்கமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்க் காப்புறுதிச் சபையால் கமக்காரர் ஓய்வூதியம் வழங்கும் காப்புறுதித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் இவ்வேளையில் பயிர்க்காப்புறுதி மேறகொண்டிருந்தால் விவசாயிகளுக்கான பயிர் அழிவு நஷ்ட ஈட்டினை பயிர்க் காப்புறுதிச் சபை வழங்கியிருக்கும்.

தற்போதைய சமாதான சூழலில் பயிர்க் காப்புறுதியை மேற்கொள்ளாதது, அரச தொடர்புடைய அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

(10-352)

### தொடரும் மழை

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை இன்னும் சில நாள்களுக்குத் தொடர்ந்து பெய்யுமென திருநெல்வேலியில் உளள வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இந்த வருடத் தொடக்கத்திலிருந்து நேற்றுக் காலை 9 மணிவரை 1249.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் அவதான நிலையம் தெரிவித்தது. மழைபெய்யும் போது இடையிடையே அதிகூடிய காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (10-7)

# மீட்புநிதிக் கடன் மீளளிப்பு – 2004

யாழ்ப்பாணம்,நவ.15

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப் பட்டோரில் கிளிநொச்சி (ஒரு பகுதி), வவுனியா, முல்லைத்தீவு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களின் பெயர் இங்கே பிரசுரமாகின்றன.

### கிளிநொச்சி உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| கி/2924 | இராமலிங்கம் வயித்திலிங்கம் |
| கி/2930 | பொன்னுச்சாமி இராசரத்தினம் |
| கி/2949 | சின்னையா நடராசா |
| கி/2953 | வேலுப்பிள்ளை கனேசபிள்ளை |
| கி/2956 | சந்தியோகு ஞானப்பிரகாசம் |
| கி/2957 | கார்த்திகேசு துரைராசா |
| கி/2985 | கனகசபை சீவரத்தினம் |
| கி/3003 | செல்லப்பா நல்லையா |
| கி/3021 | பெருமாள் வேலுச்சாமி |
| கி/3022 | திருமதி செபமாலை அந்தோனிப்பிள்ளை |
| கி/3034 | திருமதி கமலம்மா ஆறுமுகம் |
| கி/3046 | நாகநாதன் செல்லத்துரை |
| கி/3056 | பரமாசிங்கம் ஏரம்பு |
| கி/3060 | குமாரசாமி பாலசிங்கம் |
| கி/3075 | நாகேந்திரர் வைபித்தியநாதி |
| கி/3091 | நன்னித்தம்பி பொன்னம்பலம் |
| கி/3093 | திருமதி அம்பிகாவதி சரவணமுத்து |
| கி/3096 | வைத்திலிங்கம் சுப்பிரமணியம் |
| கி/3098 | கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை |
| கி/3113 | இளையதம்பி இராசையா |
| கி/3120 | கந்தையா வேலாயுதபிள்ளை |
| கி/3146 | முருகேசு தில்லையம்பலம் |
| கி/3151 | சூரியர் செல்லத்துரை |
| கி/3171 | சிவக்கொழுந்து வல்லிபுரம் |
| கி/3201 | சிதம்பரப்பிள்ளை காங்கேசு |
| கி/3217 | சின்னத்தம்பி வேலுப்பிள்ளை |
| கி/3232 | செல்லையா பரராசசிங்கம் |
| கி/3234 | திருமதி சங்குபதி பொன்னுத்துரை |
| கி/3243 | சின்னத்துரை புஸ்பராசா |
| கி/3259 | திருமதி கமலாம்பிகை குணசிங்கம் |
| கி/3262 | நீக்கிலான் கிறிஸ்தோப்பர் |
| கி/3271 | கிருஸ்ணபிள்ளை மார்க்கண்டு |
| கி/3275 | சின்னத்தம்பி அழகரத்தினம் |
| கி/3277 | வேலுப்பிள்ளை இராசையா |
| கி/3288 | திருமதி குஞ்சுப்பிள்ளை கந்தர் |
| கி/3294 | இராமசாமி சரவணமுத்து |
| கி/3322 | கண்ணி செல்லத்தம்பி |
| கி/3331 | செல்வி செல்லாச்சி வீரகத்தி |
| கி/3333 | சின்னத்துரை தவகுணபாலநாதன் |
| கி/3365 | வைத்திலிங்கம் குலசேகரம்பிள்ளை |
| கி/3368 | திருமதி றோசம்மா அல்பிறற் |
| கி/3386 | இராசதுரை வல்லிபுரம் |
| கி/3391 | செபஸ்தியான் அமுலசாமி |
| கி/3414 | செல்வி பாக்கியம் தம்பிப்பிள்ளை |
| கி/3428 | கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் |
| கி/3441 | வயித்தி பொன்னையா |
| கி/3451 | செல்லர் முருகர் |
| கி/3467 | மயிலு சோமு |
| கி/3468 | திருமதி செல்லம்மா சண்முகம் |
| கி/3477 | முருகேசு மருதையினார் |
| கி/3525 | யோசெப் அந்தோனிப்பிள்ளை |
| கி/3531 | கணபதி சண்முகம் |
| கி/3536 | திருமதி காசிப்பிள்ளை செல்லத்துரை |
| கி/3537 | வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை |
| கி/3543 | செல்வி தவயோகி பொன்னுச்சாமி |
| கி/3573 | சற்றம்பலம் பரமேஸ்வரன் |

### வவுனியா உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| வ/3 | சின்னையா சந்திரசேகரம் |
| வ/6 | கந்தையா சிவக்கொழுந்து |
| வ/12 | செல்லத்துரை கந்தையா |
| வ/16 | பரமு சிதம்பரப்பிள்ளை |
| வ/19 | திருமதி. அன்னலட்சுமி கதிரவேலு |
| வ/28 | திருமதி. மகேந்திரம் தளையசிங்கம் |
| வ/29 | வீரகத்தி கணபதிப்பிள்ளை |
| வ/64 | தருமலிங்கம் குலராசா |
| வ/65 | நல்லதம்பி தம்பிநாயகம் |
| வ/72 | நாகநாதி தருமலிங்கம் |
| வ/74 | இராமு பேரம்பலம் |
| வ/89 | தம்பிப்பிள்ளை பசுபதி |
| வ/95 | இராமுப்பிள்ளை குமாரையா |
| வ/119 | ஆறுமுகம் சிவசுப்பிரமணியம் |
| வ/132 | காசிப்பிள்ளை இரத்தினசிங்கம் |
| வ/134 | வீரவாகு நடராசா |
| வ/136 | அருணாசலம் கிருஸ்ணசாமி |
| வ/139 | வல்லிபுரம் பரராசசிங்கம் |
| வ/147 | வீரவாகு கணபதிப்பிள்ளை |
| வ/155 | ஆறுமுகம் தம்பிராசா |
| வ/159 | தம்பு மயில்வாகனம் |
| வ/172 | சுந்தரம்பிள்ளை சிவநேசலிங்கம் |
| வ/188 | சுப்பர் கந்தசாமி |
| வ/194 | கார்த்திகேசு நடராசா |
| வ/201 | கந்தையா தம்பிராஜா |
| வ/210 | சேதுப்பிள்ளை குமாரசாமி |
| வ/213 | வீரபாகு சுப்பிரமணியம் |
| வ/216 | மாரிமுத்து தர்மலிங்கம் |
| வ/260 | வீரவாகு செல்லையா |
| வ/265 | வல்லிபுரம் மகாதேவன் |
| வ/277 | பொன்னர் செல்லையா |
| வ/279 | வயிரமுத்து சிற்றம்பலம் |
| வ/282 | கார்த்திகேசு நாராயணபிள்ளை |
| வ/287 | நாகலிங்கம் கந்தையா |
| வ/291 | குமாரசாமி அருளம்பலம் |
| வ/298 | சுந்தரலிங்கம் புவனேஸ்வரன் |
| வ/301 | தனுக்கோடி நாகமுத்து |
| வ/314 | சரவணமுத்து விநாயமூர்த்தி |
| வ/347 | கந்தவனம் சோமசுந்தரம் |
| வ/351 | பெருமாள் முத்தையா |
| வ/355 | சோமநாதர் இரத்தினம் |
| வ/361 | பொன்னையா துரையப்பா |
| வ/367 | திருமதி. பதஞ்செல்வி பொன்னம்பலம் |
| வ/374 | நல்லதம்பி கயிலாயபிள்ளை |
| வ/375 | ஆறுமுகம் காசிப்பிள்ளை |
| வ/376 | அருணாசலம் செல்வராசா |
| வ/380 | பொன்னையா பரமு |
| வ/402 | செல்லையா குகதாசன் |
| வ/430 | வீரசிங்கம் சுப்பிரமணியம் |
| வ/434 | திருமதி. பிறிஜிற் அன்னம்மா பீற்றர் |
| வ/439 | திருமதி. சோதி கந்தையா |
| வ/444 | இராமு பொன்னுத்துரை |
| வ/451 | முத்தையா சிதம்பரப்பிள்ளை |
| வ/454 | திருமதி. மரியம்மா தம்பிராசா |
| வ/459 | சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை |
| வ/462 | சின்னசாமி பழனிசாமி |
| வ/463 | பொன்னையா இராசநாயகம் |
| வ/471 | மாரிமுத்து முருகேசு |
| வ/472 | செல்லையா பத்மநாதன் |
| வ/479 | கனகன் காங்கேசு |
| வ/496 | செல்லையா மார்க்கண்டேயர் |
| வ/522 | இராயப்பு அந்தோனிப்பிள்ளை |
| வ/535 | பொன்னையா திருஞானசம்பந்தன் |
| வ/549 | பி சுப்பிரமணியம் |
| வ/561 | வன்னியசிங்கம் முத்தையா |
| வ/566 | நல்லம்மா மயில்வாகனம் |
| வ/582 | கனகர் நாகமணி |
| வ/589 | கந்தையா சிவராசா |
| வ/602 | கந்தையா சிவஞானசுந்தரம் |
| வ/634 | கந்தன் ஞானப்பிரகாசம் |
| வ/635 | பொன்னையா சுப்பிரமணியம் |
| வ/643 | ஆறுமுகம் மயில்வாகனம் |
| வ/668 | சின்னமுத்து கருப்பையா |
| வ/688 | சபாபதி சூசைப்பிள்ளை |
| வ/697 | தம்பு இராசையா |
| வ/704 | திருமதி. சீவரத்தினம் சின்னத்துரை |

### முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| மு/18 | கனகசுந்தரம் கனகரத்தினம் |
| மு/19 | கணவதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| மு/48 | திருமதி. தங்கம்மா முருகுப்பிள்ளை |
| மு/53 | சவரிமுத்து வரப்பிரகாசம் |
| மு/54 | பிரன்சிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| மு/55 | திருமதி. மேரிகிறேஸ் கனேஷபூபன் |
| மு/63 | யேமிஸ் பிரான்சீஸ் சேவியர் |
| மு/76 | கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை |
| மு/97 | திருமதி. செல்லம்மா கந்தசாமி |
| மு/110 | திசராசசெல்வம் குணரட்ணம் |
| மு/134 | இராசதுரை தங்கத்துரை |
| மு/143 | சபாபதி நவரத்தினம் |
| மு/155 | குமாரு கந்தையா |
| மு/181 | இராஜசேகரர் வேகாவனம் |
| மு/187 | நாகமணி சிவகுரு |
| மு/195 | வேலு சின்னையா |
| மு/206 | மாப்பாணர் சந்திரசேகரி |
| மு/210 | கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை |
| மு/215 | செல்லையா சண்முகம் |
| மு/227 | துரைச்சாமி பரராசசிங்கம் |
| மு/231 | செல்லத்துரை சங்கரப்பிள்ளை |
| மு/233 | நாகமுத்து செல்லத்துரை |
| மு/268 | துரைச்சாமி சதாசிவம் |
| மு/284 | ஆறுமுகம் நயினார் |
| மு/285 | சின்னத்துரை கோபாலசிங்கம் |
| மு/294 | கயிலாசபிள்ளை உடையார் இராமநாதன் |
| மு/303 | முருகன் கணபதிப்பிள்ளை |
| மு/310 | சகாபதி அண்ணாமலை |
| மு/320 | கந்தையா வல்லிபுரம் |
| மு/332 | இளையவி வேலு |
| மு/333 | பொன்னையா சபாரத்தினம் |
| மு/341 | ஏரம்பு சின்னையா |
| மு/353 | பொன்னையா முத்துராசா |
| மு/359 | சிதம்பரப்பிள்ளை சிவானந்தம் |
| மு/362 | கனகசபை தங்கராசா |
| மு/399 | பொன்னையா கணபதிப்பிள்ளை |
| மு/408 | அரியகுட்டி குமாரசாமி |
| மு/412 | சரவணமுத்து வேலாயுதம் |
| மு/416 | சதாசிவம் தங்கராசா |
| மு/419 | வினாசித்தம்பி பரமலிங்கம் |
| மு/423 | திருமதி. நகுலாம்பிகை தம்பு |
| மு/426 | சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளை |
| மு/433 | வேலுப்பிள்ளை குழந்தைவேலு |
| மு/444 | சுவாம்பிள்ளைநீக்லஸ் பேர்ணாடியஸ் |
| மு/464 | செல்லையா முருகுப்பிள்ளை |
| மு/468 | அ. காசிப்பிள்ளை மகாலிங்கம் |
| மு/470 | சின்னையா குமாரையா |
| மு/472 | கணபதிப்பிள்ளை கதிர்காமு |
| மு/495 | பொன்னையா நடராசபிள்ளை |
| மு/502 | நாகநாதன் பாலசிங்கம் |
| மு/504 | பொன்னம்பலம் தம்பையா |
| மு/528 | திருமதி. கிறிஸ்ரீனம்மா யாக்கோப்பு |
| மு/539 | சோமசுந்தரம் செல்லத்துரை |
| மு/543 | ஆபிரகாம் சாமிநாதன் |
| மு/572 | சின்னர் சிதம்பரப்பிள்ளை |
| மு/600 | ஆறுமுகம் நாகமணி |
| மு/602 | வேலுப்பிள்ளை கனபதிப்பிள்ளை |
| மு/608 | தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு |
| மு/613 | வைரவி மாணிக்கம் |
| மு/623 | வயித்தி யாக்கோப்பு |
| மு/624 | சின்னப்பு கந்தையா |
| மு/629 | செபமாலை செபஸ்தி |
| மு/649 | பேதுரு யோசேப் |
| மு/676 | மாணிக்கம் நடராசா |
| மு/690 | சின்னத்தம்பி முருகுப்பிள்ளை |
| மு/695 | ஜயாக்குட்டி திருநாவுக்கரசு |
| மு/699 | கணபதிப்பிள்ளை சதாசிவம் |
| மு/726 | திருமதி. செல்லம்மா செல்வரட்ணம் |
| மு/730 | திருமதி. மனோன்மணி சிவக்கொழுந்து |
| மு/755 | சின்னத்தம்பி பொன்னம்பலம் |
| மு/764 | செல்லப்பா சின்னத்தம்பி |
| மு/772 | சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளை |
| மு/775 | செல்லையா சாமிநாதன் |
| மு/778 | சுப்பிரமணியம் இராசையா |
| மு/784 | ஆறுமுகம் வேலும்மயிலும் |
| மு/791 | திருமதி. விசாலாட்சி ஆறுமுகம் |
| மு/849 | சின்னத்தம்பி மகாதேவன் |
| மு/851 | வேதாரணியம் சிதம்பரப்பிள்ளை |
| மு/863 | வேலுப்பிள்ளை கார்த்திகேசு |
| மு/881 | கந்தவனம் கனகையா |
| மு/883 | சின்னையா சிதம்பரப்பிள்ளை |
| மு/899 | திருமதி. சுபத்திரை கலியாணசுந்தரம் |
| மு/914 | வல்லிபுரம் தர்மலிங்கம் |
| மு/939 | முடியப்பு சின்னப்பு |
| மு/940 | கந்தையா சிவகுரு |
| மு/944 | பூதப்பிள்ளை தர்மலிங்கம் |
| மு/1004 | தம்பையா பொன்னையா |
| மு/1005 | தம்பாப்பிள்ளை செல்லையா |
| மு/1011 | திருமதி. முத்தம்மா இராசநாயகம் |
| மு/1012 | நாகலிங்கம் குலசிங்கம் |
| மு/1014 | திருமதி. சின்னம்மா வல்லிபுரம் |
| மு/1026 | திருமதி. அன்னப்பிள்ளை கந்தையா |
| மு/1028 | திருமதி. பொன்னம்மா கோகிலார் |
| மு/1032 | கந்தசாமி சண்முகநாதன் |
| மு/1045 | யோசெப்பு அடைக்கலதாஸ் |
| மு/1055 | கோயிலார் சிவசாமி |
| மு/1070 | அம்பலவாணர் கனகரத்தினம் |
| மு/1076 | பிலிப்பு செபஸ்தியாம்பிள்ளை |
| மு/1083 | இளையதம்பி அழகுமணி |
| மு/1087 | யோசேப் நடராசா |
| மு/1103 | நாகநாதி செல்லையா |
| மு/1108 | தம்பு சதாசிவம் |
| மு/1111 | யோசப்பு சூசைப்பிள்ளை |
| மு/1115 | வேலுப்பிள்ளை நல்லையா |
| மு/1118 | வேலுப்பிள்ளை சந்திரசேகரம் |
| மு/1137 | கணபதிப்பிள்ளை அருளம்பலம் |
| மு/1150 | இராசையா தியாகராசா |
| மு/1169 | பொன்னையா சின்னத்தம்பி |
| மு/1178 | தம்பையா சுப்பிரமணியம் |
| மு/1181 | கந்தையா தங்கராசா |
| மு/1182 | சிற்றம்பலம் வேலாயுதம் |
| மு/1197 | பெரியதம்பி கந்தையா |
| மு/1204 | திருமதி. சரஸ்வதி கந்தையா |
| மு/1218 | இராமலிங்கம் கந்தையா |
| மு/1219 | கந்தையா தம்பிஜயா |
| மு/1227 | செல்வி. லட்சுமி நல்லதம்பி |
| மு/1228 | திருமதி. செல்லம்மா கந்தையா |
| மு/1247 | சபாபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை |
| மு/1294 | முருகர் கதிர்காமு |
| மு/1299 | திருமதி. தங்கப்பிள்ளை சிவராசா |
| மு/1318 | சின்னையா வேலுப்பிள்ளை |
| மு/1322 | திருமதி. சந்திரபூரணி பொன்னையா |
| மு/1329 | கதிர்காமு சிவகுரு |
| மு/1331 | சேனாதிராசா சிவப்பிரகாசம் |
| மு/1336 | மயிலன் செல்லத்துரை |
| மு/1344 | இளையதம்பி நவரத்தினம் |
| மு/1350 | கந்தையா கதிரமலை |
| மு/1362 | திருமதி. பரமேஸ்வரி சிவஞானம் |
| மு/1366 | நோருதம் அருளப்பு |
| மு/1373 | தொம்மை யோசெப்பு |
| மு/1379 | பறுனாந்து இறப்பியேல் |
| மு/1411 | திருமதி. தங்கம்மா சிவகுரு |
| மு/1423 | மனுவேற்பிள்ளை இராயப்பு |
| மு/1440 | சின்னையா பொன்னையா |
| மு/1442 | அலுறாம்பிள்ளை வேதநாயகம் |
| மு/1461 | கந்தையா இராசையா |
| மு/1472 | சின்னத்தம்பி செல்லத்துரை |
| மு/1477 | கார்த்திகேசு கனகசபை |
| மு/1493 | திருமதி. கனகம்மா சிவசிதம்பரம் |
| மு/1528 | திருமதி. இராசம்மா சின்னத்துரை |
| மு/1529 | சில்வேஸ்த்திரி அந்தோனி |
| மு/1533 | செல்லத்துரை சூசைப்பிள்ளை |
| மு/1542 | விநாசித்தம்பி கதிரவேலு |
| மு/1548 | திருமதி. திரேஸ்லோறன்ஸ் பரராசசிங்கம் |

(முற்றும்)

# MODEL PAPER

## General Certificate of Education (Ord.Level) Examination - December - 2004

31 | E II

உதயன் ஜி.சீ.ஈ. (சா) தரம் மாதிரி பரீட்சைகள் இல.21

Time: 2 Hours

## ENGLISH LANGUAGE

Prepared By: A.UMAVAHEESAR

**Test 1**
Read the poem giveen below and answer the questions that follow.

**The Dead Warrior**

Home they brought her warrior dead;
She nor swoon'd, nor utter'd cry,
All her maidens, watching, said
"she must weep or she will die

Then they praised him, soft and low
Called him worthy to be loved,
Truest friend noblest foe;
Yet she neither spoke nor moved

Stole a maiden from her place
Lightly to the warrior slept,
took the face - cloth from the face
Yet she neither mooved nor wept

Rose a nurse of ninety years
Set his child upon her knee
Like summer tempest came her tears
"Sweet my child, I live for thee"

*Alfred Lord Tennyson*

**Swoon'd - Fainted**
**Foe - enemy**
**Tempest - Violent storm**

1. What are the three things the servants did to make the lady cry?
..............................................................................
..............................................................................
2. How many stanzas are there in this poem?
..............................................................................
..............................................................................
3. Why do you think the servants wanted the lady to cry?
..............................................................................
..............................................................................
4. Write down the word which rhymes with
   (a) Dead.............................. (d) Stept..............................
   (b) Low.............................. (e) Years..............................
   (c) Loved.............................. (f) Knee..............................
5. Write down the line which shows the lady loved her child dearly
..............................................................................
..............................................................................
6. Where do you think the man had probably met with his death?
..............................................................................
..............................................................................

**Test 2**
Fill in the blanks with suitable answer
Thailand is a premier Buddhist country where nearly ninety percent of the population are ardent followers of Buddhism. The total population is about 40,000,000. The country was formerly known as Siam which in 1939 changed in to Thailand literally meaning the "Land of the free".
It is a monarchy with a representative legislature with king Bhumibol Adul yadej as the country's amiable ruler. Born in 1927 he ascended the throne in 1946. Children's day in Thailand is observed during the first week in January every year and International. Correspondence week is celebrated during the first week of October.

**Thailand**

Population:..............................................
Former name:..............................................
The year they got its present name:..............................
Meaning of Thailand:..............................................
Name of the ruler:..............................................
Born in:..............................................
Became king:.............................................. *First Week in January*
Annual events:.................... (1).................... When:....................
(2).................... When:....................

**Test 3**
Select the correct word from the list given to fill inthe blanks. write down the number of the blank in the table against the word.

14, Athungala Road,
Galle.
29th Oct.2004

Director,
Computer Education Centre,
13, Temple Road,
Bambalapitiya.

I am interested in applying for the computer Diploma Course you advertised. I am --------(1) old and I have been --------(2) as a shop assistant at Cargills-------(3) I left School. I passed the G.C.E.(O/L) ------(4) six subjects with Distinctions in English ----(5) mathematics in 2002 at St-Jhons--------(6) I shall be obliged if you -----(7) send me an enrolment form and other ------(8) of the course at your -----(9) convenience.

Thank you

Yours---------------(10)
**Latharsan**

| | |
|---|---|
| and | faithfully |
| College | since |
| details | working |
| in | would |
| earliest | years |

**Test 4** Read this text and answer the questions given below.
It has been reported that mosquitoes are now having Safe havens on tree tops. It is bound to present both the local government authorities and the general public with a puzzling question - how could one get rid of these. "tree top" mosquitoes which are well beyond reach?
According to medical authorities of the Colombo. Municipal - Council, it is possible to spray the relevant insecticides on the usual - breeding sites of mosquitoes such as drains and puddles, but it is not possible to gain access to little holes on tree tops and crevices between branches, which are believed to constitute the parasities' new breeding ground.
While admitting that the task of evolving the practical measures to meet this novel challenge posed by the perennial pest wouldn't be easy. It must be observed that the mosquito menace has been growing steadily over the past few years. Residents living in areas, which were at one time expensive marsh land and swamps in Suburban Colombo, will testify to the multitudes of mosquitoes, which invade their homes after nightfall. The current uncurbed construction boom has taken the populace to the heart of mosquito breeding sites. Increasing pressure on land particularly in Urban areas, is a factor to be reckoned with in current probes on the mosquito menace.
In any honest assessment of this situation it has to be conceded that enough is not being done to contain the danger posed by mosquitoes. While it is true that urban expansion is taking the people closer to mosquitoes, the question has to be posed whether any sustained eradication programme has been initiated by the authorities concerned to contain the problem and make it manageable. For instance are insecticides being sprayed consistently in the areas which are most exposed to mosquitoes? Honest answers to this questions will reveal why the people are facing a rapidly growing mosquito menace.

(a) Name two normal breeding places of mosquitoes?
(b) What is the novel challenge posed by mosquitoes that the writer speakes of?
(c) Why does the writer say that it is not going to be easy to overcome this new challenge?
(d) *Underline the correst answer*
The writer says that the mosquito menace is fast growing because
1. The Urban population is growing rapidly.
2. The mosquitoes have left their usual breeding sites.
3. The areas most exposed to mosquitoes are not being properly sprayed with insecticides.
(d) Find words from the passage similar in meaning to the following
   i. Lasting a long time or for ever
   ii. places of refuge
   iii. working out
   iv. narrow openings
   v. admitted

**Test 5** Imagine you saw an accident last saturday. A pedestrian was knocked down by a car. The victim later died after admission to the hospital. Write a report of the accident in about 150 words.
..............................................................................
..............................................................................
..............................................................................

**Test 6** Read the following and answer the questions given below.
It is 2nd July today. Ramanan's birthday was the day before yesterday. Tharsan's birthday was a week before Ramanan's. The day before Tharsan's birthday Ramanan played foot Ball. Tharsan did not play on that day, But he played Cricket after his birthday.
1. When was Tharsan's birthday?
..............................................
2. When was Ramanan's birthday?
..............................................
3. When did Ramanan play foot ball?
..............................................
4. On what date did Tharsan play cricket?
..............................................
5. What date is today?
..............................................

**Test 7** Write a letter to one of the two following people as directed using about 100 Words.

(1)
**Your friend Siva has invited you to his birthday party. write a letter explaining why you cannot accept his invitation.**
a) First thank him for his invitation
b) Say that you cannot attend the party
c) Your reason for it
d) wish him well and say when you hope to see him again.

**OR**

(2)
**Your friend Birunda has passed her G.C.E.(O/L) examination with 6A. Write a letter congratulating her or her success.**
a) First Congratulate and say you are glad.
b) Praise her hard work
c) Tell her to keep up the same interest always
d) Suggest her to join your school in the city for her (A/L)

**Test 8**
Write on any one of the following topics. use about 200 words.
(a) " Reading maketh a full man"
(b) A Reverie (The world in 2080)
(c) Computer and its mainfold uses
(d) Child abuse

# புலிகளிடம் உள்ள நிர்வாகக் கட்டமைப்பும் இனப்பிரச்சினைத் தீர்வில் முக்கிய விடயம்

### கலாநிதி குமார ரூபசிங்க கூறுகின்றார்

கொழும்பு,நவ.16

விடுதலைப் புலிகளின் வசம் நிர்வாகக் கட்டமைப்பு உண்டு. இதனை ஆட்சியாளர்கள் ஏற்றாகவேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இதுவும் ஒரு முக்கியவிடயம்.

- இவ்வாறு தெரிவித்தார் சகவாழ்வுக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி குமார் ரூபசிங்க .

நேற்றுமுன்தினம் மாலை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் உரையாற்றினார். இந்நிகழ்வை சமாதானத்திற்கான ஆய்வகம் ஏற்பாடுசெய்திருந்தது.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இனப்பிரச்சினை உண்டு. இதற்கு சமஷ்டி வழியே தீர்வுகாணமுடியும். சம்பந்தப்பட்ட இருதரப்பும் புலிகளும் - அரசுத் தரப்பும் இதில் உடன்பட்டுள்ளன.

எதிர்க்கட்சிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை இதுவரை காலமும் எதிர்த்தே வந்திருக்கின்றன. எனினும், இப்போதுள்ள எதிர்க்கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று தெரிவித்துள்ளது. இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இது ஒரு மாற்றமான அரசியல் சூழல் இதனைப் பயன்படுத்தவேண்டும்.

பணடா - செல்வா உடன்படிக்கை நடைமுறைப்படவில்லை. அப்போதைய எதிர்க்கட்சி அதனை எதிர்த்தது. பின் 2000 ஆம் ஆண்டு ஓகஸ்டில் புதிய அரசமைப்புக்கான வரைவு மேற்கொள்ளப்பட்டது. அது நாடாளுமன்றத்தில் வைத்தே தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

ஆனால், இப்போது அரசியல் சூழல் மாறியுள்ளது. எதிர்க்கட்சி ஆளுந்தரப்பின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் உதவவுள்ளது. இதனை எதிர்க்கட்சி பகிரங்கமாகவும் அறிவித்துள்ளது.

எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தீர்வுகாண்பதில் அவசரம் காடடலாம் - என்றார் சகவாழவுக்கான அமைப்பின் பணிப்பாளர் குமார் ரூபசிங்க.

கூட்டத்தில் சமாதானத்திற்கான ஆய்வகத்தின் தலைவர் ரணத் குமாரசிங்கவும் உரைநிகழ்த்தினார்.

உரைகள் சிங்களத்தில் ஆற்றப்பட்டன. அவற்றை எஸ். சிவகுருநாதன் தமிழில் மொழிபெயர்த்தார். (எ-க)

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு அருள்மிகு
ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில் (காளிகோயில்)
பரிபாலன சபையின் முன்னாள் தலைவரான




### அ.இராசையா

அவர்கள் 14-11-2004 இல் காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். ஒரு சிறந்த தலைவரை இழந்துவிட்டோம். அன்னாரது இழப்பு பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்திபெற விநாயகப் பெருமானினதும் காளி அம்பாளினதும் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோண்டாவில் மேற்கு. - ஆலய பரிபாலன சபையினர்.
(38640) (26-34-11-44)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **மாணிக்கர் சின்னத்துரை**

(இளைப்பாறிய உப அதிபர்)

திதி:16.11.2004

பாசமுடன் எமை வளர்த்து
பாரினிலே மிளிர விட்ட
அன்புத் தந்தையின்
அடியினை வணங்குகின்றோம்.

"சிவகிரி"
கேணியடி, குப்பிளான்,
ஏழாலை.
(38623)(39-11-46-34)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
31 - 08 - 1934



இறைவன் அடியில்
28 - 11 - 2003

எங்கள் குடும்ப விளக்கு

### திருமதி நல்லம்மா நடேசன்

திதி: 16.11.2004

*அன்னையென வந்தெமை ஆட்கொண்ட இன்னமுதே!*
*அன்பு மழை பொழியும் ஆருயிரே அம்மாவே!*
*முன்னைத் தவப்பயனே நாம் முன்பு செய்த நல்வினையே*
*அன்னையராய் உம்மைப் பெற்றோம் பெருமைதனை நாமடைந்தோம்*
*கன்னல் மொழி அழகும் உந்தன் கள்ளமில்லாச் சிரிப்பழகும்*
*வள்ளல் குணமும் உன்வாய் சிந்தும் முத்தழகும்*
*இன்றும் எம் இல்லத்தில் இருப்பதுபோல் தோன்றுதம்மா!*
*மின்னல் போல் மறைந்தாய் மிகத் துயரில் வாடவைத்தாய்!*
*எங்கள் பொன்னே மணியே இன்று புழுவாகித் துடிக்கின்றோம்!*
*மாதர்க்கரசே எம்மணி விளக்கே! மாணிக்கமே!*
*நேசக்கரம் நீட்டி எமை நீ அழைக்கும் நாள் வருமோ?*
*உதிரத்தைப் பாலாய் ஊட்டி வளர்த்தவளே! உத்தமியே!*
*உமைப்பிரிந்து ஓராண்டு ஆறவில்லை எம் மனது!*

"லக்சுமி வாசா"
உடுவில் தெற்கு,
சுன்னாகம். (38625)(39-11-46-34)

அன்னையின் நினைவை மறவாத:
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

### தீபாவளியன்று நடந்த திருட்டு சந்தேகநபர்கள் மறியலில்

நீர்வேலிப் பகுதியில் தீபாவளி தினத்தன்று வீடொன்றினுள் யன்னல் உடைத்து 49ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் களவாடிய சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தில் கைது செயயப்பட்ட ஐவரை எதிர்வரும் 24ஆம் திகது வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த தங்கராசா-தீபன், வாசுதேவன்-கார்த்தீபன், இராசரட்ணம்-பார்த்தீபன், வேலாயுதம்-பிரதீபன், பாலச்சந்திரன-தயாளன் ஆகிய சந்தேக நபர்கள் கோப்பாய்ப் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இச் சந்தேக நபர்களிடமிருந்து களவாடப்பட்ட நகைகள் சிலவற்றை மீட்டுள்ளதாக பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். (எ-13)

# 'காலத்தை வென்ற தலைவன்' நூல் கனடாவிலும் வெளியீடு

றொறன்டோ,நவ.16

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் ஆளுமையின் பதிவாகிய 'காலத்தை வென்ற தலைவன்' நூல்வெளியீட்டு விழா கனடாவில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் முன்னதாக தமிழீழத் தேசியக்கொடியேற்றல், பொதுச்சுடரேற்றல், அகவணக்கம் என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

நிகழ்வில் நூலின் வெளியீட்டுரை, மதிபபீட்டுரையினைத் தொடர்ந்து கனடா உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் நாவலன் 'காலததை வென்ற தலைவன்' என்னும் நூலை வெளியிட்டு வைத்தார்.

நாட்டிய நடனம், கவியரங்கம், எழுச்சி கானங்கள் ஆகியனவும் இடம்பெற்றன. நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (8-13)

# இந்திய மீனவர்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க ஜெயலலிதா கோரிக்கை

### பிரதமர் மன்மோகனுக்குக் கடிதம்

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பினுள் வைத்துக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதுலமைச்சர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்திக்கேட்டுள்ளார்.

இந்தியமீனவர்களை உடன்விடுவிக்க ராஜதந்திர நகர்வின்மூலம் விசேட நடவடிக்கை எடுப்பதற்கு வெளிவிவகார அமைச்சுக்கு பணிப்புரை விடுக்குமாறும் இந்தியப் பிரதமரிடம் அவர் கோரியுள்ளார். இப்பிரச்சினைக்கு எந்த வித தாமதமும் இன்றி நிரந்தரத்தீர்வொன்று காணப்படவேண்டும் எனவும் அவர் பிரதமரிடம் மேலும் வலியுறுத்தியுள்ளார். (க-8)


## விசேட அறிவித்தல்

யாழ்.மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!

கொழும்பு அப்பலோ மருத்துவமனை அவசர சிகிச்சை மருத்துவர் உங்களை 19, 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் சந்திக்கின்றார். சகலவித மருத்துவ ஆலோசனைகளுக்கும் அனுகவும். முன் பதிவிற்கு உடன் தொடர்புகொள்ளவும்.

அப்பலோ மருத்துவமனை
தகவல் நிலையம்,
272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-38989)(34-11-46)

திரு.புறாடி
தொலைபேசி
077 3082702,
021 4590500.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### தங்கமுத்தம்மா நாகலிங்கம்

(பிரபல செங்கண்மாரி வைத்தியர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07.05.1922 | 17.10.2004 |



"மண்ணில் பிறந்தபயன் மாநிலம் பின் நினைப்பது
என்றும் நினைக்க வைத்து மறைந்து விட்ட அம்மாவே
என்று காண்போம் உன்தன் அன்பு முகம்?
அன்பான அருள்வார்த்தை என்றும் எம் உள்ளத்தில் நிலைத்து இருக்குதம்மா"

17.10.2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து மோட்சபூசையும், நினைவு மலர் வெளியீடும், மலர் அன்பளிப்பும், மதியபோசன உபசாரமும் சுன்னாகம் கதிரைமலைச் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் அந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் மிகவும் பணிவுடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்துவந்து எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், மரணச்சடங்கின்போது நேரில் வந்து உதவிகள் பல புரிந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், கடிதம், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

☞ தனிப்பட்ட முறையில் அழைப்பிதழ் வழங்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்...

செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம். (சி-38998)(39-11-46-34)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வாழும் விவசாயிகள் நல்லின நெல்லினங்களைப் பெறுவதில் சிரமம்

ஒட்டுசுட்டான், நவ.16

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் சிபார்சு செய்யப்பட்ட நல்லின சிறு தானிய வகைகளையும், நல்லின விதை நெல்லினங்களையும் பெறுவதில் சிரமம் அடைந்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டிற்கு முன் விவசாயிகள் விவசாயத் திணைக்களத்திலும் தனியார் பதிவு செய்யப்பட்ட தனியார்வர்த்தக நிலையங்களிலும் நல்லின விதைகளைப் பெற்று பயிற் செய்கையினை மேற்கொண்டுவந்தனர். ஆனால் போர்ச் சூழல் காரணமாக அந்த நிலை மாறி எந்தவொரு தானிய வகைகளையும் பெற முடிவதில்லை. முத்தையன்கட்டுத்திட்டம் உப உணவுச் செய்கைக்கென 1967 ஆம் ஆண்டு கட்டப்பட்டு அங்கே சுமார் 3000 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு சுமார் 6ஆயிரத்து112 ஏக்கரில் உப உணவுச் செய்கையினை மேற்கொணடு அதன் மூலம் அவர்கள் இலாபத்தைப் பெற்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்பாலும் நல்லின விதைகளைப் பெற முடியாததாலும் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் இல்லாததாலும் சிறிது சிறிதாக மக்கள் நெற்செய்கைக்கேற்ப காணிகளை தயார்ப்படுத்தி தற்போது நெற்செய்கைக்குரிய நிலங்களாகவே மாற்றியுள்ளனர்.

இருந்தபோதும், நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மண்ணிற்கேற்ப நெல்லினங்களை நேரகாலத்தோடு பெற்றுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அக்கறை காட்டவில்லை. தற்போதும் கூட மழையினால் அழிவுற்ற நிலையில் 3 முதல் 3½மாத நெல்வர்க்கங்கள் இன்றி வேறு கிராமங்களில் கூடிய விலைகொடுத்து நெல் பெறவேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட ஏ.ரி.353, பி.ஜி. 11 (சம்பா) 60 நாள் பயிரான குறுவை போன்ற 3 முதல்3½ மாத நெல்லினத்தையும் பி.ஜி 351, பி.ஜி 402 போன்ற 4 முதல் 4½ மாத நெல்லினங்களையும் மட்டுமே இப்பிரதேசத்தில் பெறமுடிந்துள்ளது. இருந்தபோதும், கமநலச்சேவை நிலையம் ஊடாக விண்ணப்பித்தாலும் கூட குறிப்பிட்ட ஒரு இனமே வந்துசேரும். அதுவும் எமது விதைப்புக் காலத்திற்கு வராது காலதாமதமாகி அதிக விலை கொடுத்து பெறமுடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

விவசாயிகள் கருத்துப்படி விதைப்புக்களை மேற்கொள்ளும்போது நெல்லாக இருந்தாலும் சரி, உப உணவுப் பயிராக இருந்தாலும் சரி, முன்னைய ஆண்டுகளைப்போல எமது மண்ணிற்கேற்ப விதை தானியங்களை கமநல சேவை நிலையம் ஊடாகவே விநியோகம் செய்யக்கூடியவகையில் விவசாயத்திணைக்களம் செயற்பட்டால் விவசாயிகள் உச்ச பயனை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே எமது பிரதேசம் பாரம்பரிய பயிர்ச் செய்கை நிலமாகையாலும் பாரிய நீர்ப்பாசனத் திட்டமாகையாலும் விவசாயத் திணைக்களம் இப்பிரதேச விவசாயிகளின் நலனை கவனத்திற்கொண்டு உரிய காலப் பகுதியில் தேவையான தானிய வகைகளைப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும - என்று விவசாயிகள் கோருகின்றனர். (8-341)

## கள்ளப்பாடு பாடசாலைக்கு புதிய கட்டடம்

முல்லைத்தீவு கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு புதிய கட்டடம் கடந்த் 10ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

மாலை 4.30 மணியளவில் வித்தியாலய அதிபர் திருமதி இ.பாலராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கள விளக்கினை கள்ளப்பாடு ஆதிவைரவர் ஆலய குருக்களும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும் ஏற்றினார்கள்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களில் வரவேற்பு நடனத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். தமிழீழ தேசியக்கொடியினை முல்லைத்தீவு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றினார். தொடர்ந்து புதிய கட்டடத்தினை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமில்டா சுகுமார் நாடாவை வெட்டி வைபவரீதியாகத் திறந்து வைத்தார். (8-353)



கிளிநொச்சி நாகேந்திரபுரம் கிராமத்தில் 'நியாப்' திட்டத்தின் கீழ் 5 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள பொதுநோக்கு மண்டபத்தைப் படத்தில் காணலாம். (படம்: பரந்தன் செய்தியாளர்)




## வவுனியா ஆசிரியர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை

வட்டக்கச்சி,நவ.16

கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் வவுனியா போரூட் நிறுவன அனுசரணையுடன் வன்னி மாவட்ட தமிழீழக் கல்விக் கழகம், வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகம் ஆகியவற்றின் ஆதரவுடன் வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான 5 நாள் வதிவிட நாடகப் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்தியது.

கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமான இப் பயிற்சிப் பட்டறை 9 ஆம் திகதிவரை நடைபெற்றது.

இதன் ஆரம்பநாள் நிகழ்வு அழகியல் கலாமன்ற அதிபர் க.விஜயசேகரன் தலைமையில் நடைபெற்றது. மங்கள விளக் கினை தமிழீழ கல்விக்கழக வன்னி மாவட்டப பொறுப்பாளர் எஸ்.ஞானம், வவுனியா போரூட் நிறுவன திட்ட முகாமையாளர் சுதந்திரராஜ் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆ.காண்டீபன் ஏற்றி வைத்தார்.

ஆசியர்களுக்கான பயிற்சியினை அழகியல் கலாமன்ற வள அணியினர் வழங்கினார்கள். அத்துடன் விசேட விரிவுரைகளும் நடைபெற்றன. விரிவுரைகளை யாழ்.பல்கலைக் கழக நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளர் க.சிதம்பரநாதன், ஆசிரியர் விந்தன், தமிழீழ மூத்த எழுத்தாளர்களும் கலைஞர்களுமான தமிழ்க் கவி கருணாகரன், அமரதாஸ், நிலாந்தன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். (8-405)

# இரத்தினபுரத்தில் பாலம் புனரமைப்பு இடைநிறுத்தம்: தற்காலிக மரப்பாலம் ஊடாகப் போக்குவரத்து

திருவையாறு,நவ.16

தொடர்ச்சியாக பெய்துவருகின்ற மழை காரணமாக கிளிநொச்சி இரத்தினபுரத்தை இணைக்கும் கால்வாய்க்கான பாலம் அமைக்கும் பணிகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட போதும் தற்போது முற்றாக நீர்நிரம்பிப்பாய்வதால் அனைத்து வேலைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், மக்கள் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டதுடன் ஏற்கனவே அமைந்த மரப்பாலத்தையேனும் தற்காலிகமாக அமைத்துத் தருமாறு விடுத்த வேண்டுகோளுக்கமைவாக தற்காலிக மரப்பாலம் சில திருத்த வேலைகளுடன் மீண்டும் மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

இரண்டு அடி அகலமுடைய இப்பாலம் சுமார் 50 அடி நீளமானதுடன் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் பாதசாரிகள் மட்டுமே பயணம் செய்யக்கூடியதாக உள்ளது.

இம்மரப்பாலம் நிலத்திலிருந்து எட்டு அடி உயரத்தில் உள்ளதுடன் பாலத்திலிருந்து ஒரு அடி கீழாக நீர் மிகவேகமாக பாய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (8-393)

# வட்டக்கச்சி ம.வி. பொன்விழாவையொட்டிய சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகின

வட்டக்கச்சி, நவ.16

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஆதரவுடன் வட்டக்கச்சி மகாவித்தியாலய பொன்விழாவை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பினரால் கடந்த 10ஆம் திகதி வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அணிக்களுக்கிடையில் சதுரங்கப் போட்டி நடத்தப்பட்டது

இப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு தமிழீழ மாணவர் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் க.ஈழப்பிரியன் தலைமையில நடைபெற்றது. ஆசியுரையினை வட்டக்கச்சி மகா வித்தியால்ய அதிபர் சி.சந்திரராசா வழங்கினார்.

தொடர்ந்து போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியின் நடுவர்களாக கல்விக்கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் க.மோகன், வட்டக்கச்சி ம.வி.ஆசிரியர் தி.சிவரூபன், யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட மாணவன் சொ.ரஜீவன் ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டியின் முடிவுகள் வருமாறு:-

**19 வயது ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் வட்டக்கச்சி ம.வி., இரண்டாமிடம் கிளிநொச்சி மத்திய கல்லூரி, மூன்றாமிடம் இராமநாதபுரம் ம.வி.

**19 வயது பெண்கள் பிரிவு**

முதலாமிடம் வட்டக்கச்சி ம.வி., இரண்டாமிடம் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, மூன்றாமிடம் இராமநாதபுரம் ம.வி.

**15 வயது ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் வட்டக்கச்சி ம.வி.,இரண்டாமிடம் இராமநாதபுரம் ம.வி., மூன்றாமிடம் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை.

**15 வயது பெண்கள் பிரிவு**

முதலாமிடம் வட்டக்கச்சி ம.வி., இரண்டாமிடம் இராமநாதபுரம் ம.வி. (8-405)

# முல்லை-நீராவிப்பிட்டி முன்பள்ளியில் விளையாட்டு முற்றம் திறந்துவைப்பு

ஒட்டுசுட்டான்,நவ.16

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கல்வி மேம்பாட்டுப்பேரவை ஆகியவற்றின் அனுசரணையுடன் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் நீராவிப்பிட்டி முன்பள்ளியின் விளையாட்டு முற்றம் அண்மையில் சம்பிரதாயப் பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

முன்பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் முத்து முகமது தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் சுதாவின் தாயார் திருமதி க.பொன்னம்மா ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை அருட் சகோதரி பா.கமலேஸ்வரி, முள்ளியவளை பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி பு.பிரதீஸ்வரி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை முன்பள்ளி ஆசிரியை மா. சியாமளா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து விளையாட்டு முற்றத்தினை முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ.சஞ்ஜீவன் நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். (8-5-341)

# கிராம அபிவிருத்தி-மாதர் அபிவிருத்திச் சங்கங்களை இணைத்துச் சமாஜம் அமைக்க முடிவு

ஒட்டுசுட்டான் பிரதேச கிராம அபிவிருத்தி, மாதர் சங்க அபிவிருத்தி சங்கங்களின் நிர்வாகிகளுக்கான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 10மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி கந்தையா சுபாஜினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நியாப் திட்டப் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கலந்து கொண்டார்.

நடைமுறையிலுள்ள நியாப் திட்டம் தொடாபாக பிரதேச செயலக நிர்வாக அலுவலர் கருத்துரை வழங்கினார். இதனையடுத்து கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றிற்கான சமாசம் ஒன்று நிர்மாணிப்பது பற்றியும் தீர்மானம் எடுக்கப் பட்டது.

அபிவிருத்திச் சங்கங்களின் கிராம மட்டப் பொறுப்பாளர் ஈழவன், தமிழர் புனர்வாழ்வு வலுவூட்டல் பகுதி பொறுப்பாளர், பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர். இக்கருத்தூட்டலின்போது 70 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். (8-341)

SHARP
be sharp
கொண்டாட்டம்...: கொண்டாட்டம்...
பிறவுண்ஸ் வழங்கும் நம்பமுடியாத கொடுப்பனவுகள் விரையுங்கள்...
ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் கூடிய Sharp T.V.5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையில்...
14D25 20295/= 16775 /=
20D25 30525/= 25000/=
21EFGIA 38995 /= 32956 /=
இன்னும் பல கொடுப்பனவுகள்.....
BROWNS GROUP BG ESTD 1875
பிறவுண்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.



# சுகாதாரத்துறை குறைபாடுகள் புதுவருடத்திலாவது நீக்கப்படுமா?

சுகாதாரத் திணைக்களத்தினால் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 2005 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்கள் ஆகியவற்றில் நீண்டகாலமாக நிலவிவரும் ஆளணிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு, சுகாதார - வைத்திய சேவைகள் சீரானமுறையில் நடைபெற வழிவகுக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் தீவகப் பிரதேசத்திலும் ஏனைய பிரதேசங்களிலுமுள்ள அரசினர் வைத்தியசாலைகள் பலவற்றில் (MBBS தர) டாக்டர்கள், பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், குடும்ப நல சுகாதார அலுவலர்கள் ஆகியோர்களுக்கான வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமல் பல வருடகாலமாக இருந்து வருகின்றன.

பல வைத்தியசாலைகளில் ஓய்வுபெற்ற பின்பு மீள் நியமனம்பெற்ற பதிவுசெய்யப்பட்ட வயோதிப - வைத்திய அதிகாரிகள், டாக்டர்கள், மருந்துக் கலவையாளர்கள் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் சிலர் அடுத்த 2005 ஆவது ஆண்டில் தொடர்ந்தும் பணிபுரிய விண்ணப்பிக்கவில்லை என்று தெரியவருகின்றது.

இதேவேளை - சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் ஆளணித் திட்டத்தின் கீழ் இரண்டு, மூன்று டாக்டர்கள் பணிபுரிய வேண்டிய வைத்தியசாலைகள் பலவற்றில் ஒரே ஒரு டாக்டரே பணிபுரிந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றில் எம்.பி.பி.எஸ். (MBBS) தரமுள்ள டாக்டர்களே பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றவேண்டும் என்றும் அவர்களுடன் பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் இருவர் பணியாற்றவேண்டும் என்றும் ஆளணித் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்திட்டம் நடைமுறையில் இல்லாமல் இருந்து வருகின்றது. வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி ஒருவர் மட்டுமே தற்போது மீள் நியமனம்பெற்று கடமையாற்றி வருகின்றார்.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையிலும் பதிவுபெற்ற வைத்திய அதிகாரி ஒருவரே பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி வருகின்றார். அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் சிகிச்சைபெற வரும் வைத்தியசாலையான சங்கானைச் சுற்றயல்கூறு வைத்தியசாலையிலும் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற இரு பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் பணிபுரிந்து வருகின்றனர். வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரியாக பதவியிலிருந்து ஓய்வுபெற்ற - மீள் நியமனம்பெற்ற - பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவரே தற்போது பணியாற்றி வருகின்றார். சுன்னாகம் அரசினர் மத்திய மருந்தகத்திலும், வேலணை அரசினர் வைத்தியசாலையிலும், மானிப்பாய் அரசினர் வைத்

## செய்திக் கட்டுரை

தியசாலையிலும் பதவியிலிருந்து ஓய்வுபெற்றவர்களே பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள்.

இதேவேளை - யாழ். மாவட்டத்தில் பதிவுபெற்ற வைத்திய அதிகாரி (RMO) பதவிகள் பல நீண்டகாலமாக வெற்றிடங்களாக நிரப்பப்படாது இருந்து வருகின்றன. சுமார் 40 வெற்றிடங்கள் இருப்பதாக மதிப்பீடு ஒன்று தெரிவித்திருக்கின்றது. மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், குடும்ப நல சுகாதார அலுவலர்கள் (மருத்துவ மாதர்கள்) ஆகியோருக்கான வெற்றிடங்களும் அதிகளவில் உள்ளன.

இதேவேளை - யாழ். மாவட்டத்திலுள்ள பல சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பணிமனைகளில் நிரந்தர சுகாதார வைத்திய அதிகாரி பதவிகள் நிரப்பப்படாது வெற்றிடங்களாக இருந்து வருகின்றன. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இவற்றின் பதில் பொறுப்பதிகாரிகளாக யாழ். சுகாதாரத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டு கடமைபுரிந்து வருகின்றனர். எம்.பி.பி.எஸ். (MBBS) தரமுடைய டாக்டர்களே சுகாதார வைத்திய அதிகாரிகளாகப் பதவி வகிக்கவேண்டும் என்ற விதி இருந்தபோதிலும் இது யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. இது இவ்வாறு இருக்க, யாழ். மாவட்டத்தில் குடும்ப நல சுகாதாரசேவை அலுவலர்கள் (மருத்துவ மாதர்கள்) பதவிகள் பல நீண்டகாலமாக நிரப்பப்படாது இருந்து வருகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருப்பதால் ஒரு குடும்ப நல சுகாதார சேவை அலுவலர் தமக்குரிய பகுதிக்குரிய கடமைகளுடன் ஏனைய பகுதிகளுக்கும் பதில கடமையாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்து வருகின்றனர் என்று அறியப்படுகின்றது.

இளவாலை அரசினர் மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம், மானிப்பாய் அரசினர் மத்திய மருந்தகம் உட்பட மற்றும் பல மத்திய மருந்தகங்களில் மருந்துக் கலவையாளர் பதவி நிரப்பப்படாது இருந்து வருகின்றது. சிற்றூழியர்களே வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்கிவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கிராமப்புற வைத்தியசாலைகளின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சுகாதாரத் திணைக்களம் காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் நிலவிவரும் நோயாளர் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு இங்குள்ள கிராமப்புற வைத்தியசாலைகள் சீராக இயங்க வேண்டியது அவசியமாகும். கிராமப்புற வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று இலகுவாக மாறக்கூடிய நோய்களுக்கும் நகர்ப்புறத்திலுள்ள யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்கே மக்கள் செல்வதால் பல்வேறு சிரமங்கள் அவர்களுக்கும் போதனா வைத்தியசாலை டாக்டர்களுக்கும் ஏற்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் அரசினர் வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக நிலவிவரும் ஆளணி வெற்றிடங்களை எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றத் திட்டத்திலாவது நிரப்புவதற்கு திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சுடன் தொடர்புகொண்டு இவ்விடயம் தொடர்பாக அழுத்தம் கொடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும். யாழ். குடாநாட்டு மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிவரும் சுகாதாரம் மற்றும் வைத்தியத்துறைக் குறைபாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்குச் சுகாதாரத் திணைக்களத்தின் ஆளணிப் பற்றாக்குறை நீககப்படவேண்டியது அவசியம்.

அரசியல்துறையினரும் பொதுநல நிறுவனங்களும் இதனை வலியுறுத்தி உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்தும் பலராலும் தெரிவிக்கப்படுகின்றது. ★

- நா.மா.கந்தசாமி -
வலி.தென்மேற்கு செய்தியாளர்

## சனசமூக நிலையக் கட்டடத்துக்கு அடிக்கல் நடுகை

மாதகல், வில்வளை கலைமகள் சனசமூக நிலையப் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நட்டுவைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவால் நடப்பட்டது.

இநநிகழ்வில் மாதகல் விடுதலைப் புலிகளின் வலயப்பொறுப்பா ளர் ரமேஸ், சென்.ஜோசவ் பாடசாலை அதிபர் வி.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது நிதியில் இருந்து இக்கட்டடத்தை அமைபபதற்கு இரண்டு லட்சம் ரூபாவை வழங்கியிருந்தார். மேற்படி நிகழ்வின் பின்னர் மாதகல் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மாவை எம்பி. கேட்டறிந்து கொண்டார். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துவந்து கடற்கரையோரத்தைப் பார்வையிட்ட பின்பு கல்அணை ஒன்றை அங்கு அமைப்பதற்கு உதவுவதாகவும் அவர் தெரிவிததார். அதன்பின் மாவை சேனாதிராசா சகாயபுரம், மாரீசன்கூடல் கிராமங்களின் போக்குவரத்துச் சிரமங்கள் குறித்து அககிராமங்களுக்குச் சென்று வீதிகளைப் பார்வையிட்டார். (10-95)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்
செல்வி தயாளினி சம்பந்தன்
அவர்களின் தந்தை
சண்முகம் சம்பந்தன்

*அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.*

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
(38651) (26-34-19-44) யாழ்.போதனா வைத்தியசாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 - 02 - 1917
உதிர்வு 30 - 10 - 2003

திருமதி கதிரவேலு அருமை
திதி: பஞ்சமி 30-11-2004

பத்து மாதம் எம்மை சுமந்து பெற்றெடுத்து
ஆளாக்கிய எம் அன்னையே!
நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்று
ஆண்டொன்று ஆனாலும்
நீங்கள் வளர்த்து ஆளாக்கிய உம் செல்வங்கள் - நாம்
உம் நீங்கா நினைவுகளால் தவிக்கின்றோம் அம்மா!
ஓராண்டு என்ன பல ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது அம்மா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கணேஸ்வரம்,
அளவெட்டி.
(38650) (26-34-19-44) - குடும்பத்தினர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2005

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 2004.11.23 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 2004.11.24 முற்பகல் 11.30 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி:- 2004.11.24 நண்பகல் 12.00 மணி
04. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றிற்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறிவிடப்படும்.
05. மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.
06. கேள்விப்படிவங்களின் ஒரு பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன் மறுபிரதியினை இவ் அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும்.

மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| *நெல்லியடி உப அலுவலகம்* | | | |
| 01. நெல்லியடி மரக்கறிச்சந்தை | 1,100,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 02. நெல்லியடி மீன் சந்தை | 80,000.00 | 2,000.00 | 250.00 |
| 03. கோவிற்சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 15,000.00 | 3,500.00 | 250.00 |
| 04. கொட்டடிச் சந்தை | 2,200.00 | 500.00 | 250.00 |
| 05. நெல்லியடி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 183,200.00 | 10,000.00 | 250.00 |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 07. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.3 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 216,900.00 | 3,000.00 | 250.00 |
| 10. கோவிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 122,300.00 | 3,000.00 | 250.00 |
| 11. கோவிற் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 500.00 | 250.00 |
| *உடுப்பிட்டி உப அலுவலகம்* | | | |
| 12. அந்திரான் சந்தை | 13,400.00 | 500.00 | 250.00 |
| 13. நவிண்டில் சந்தை | 4,500.00 | 500.00 | 250.00 |
| 14. உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 500.00 | 250.00 |
| 15. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 77,100.00 | 3,000.00 | 250.00 |
| 16. உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 41,800.00 | 500.00 | 250.00 |
| *கட்டைவேலி உப அலுவலகம்* | | | |
| 17. துன்னாலை வடக்கு சந்தை | 600.00 | 500.00 | 250.00 |

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி. 26.10.2004

திரு.ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்.

(C/39050)(42-34-19-44-34)

# தெற்கில் மாவுக்குத் தட்டுப்பாடு: வெதுப்பகங்கள் பல மூடப்பட்டன

தென்பகுதியில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் நூற்றுக்கு மேற்பட்ட வெதுப்பகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக வெதுப்பக உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் - கொதுமை மாத்தட்டுப்பாடு தொடர்பாகத் தாம் பல தடவைகள் அரசிடம் முறைப்பாடு செய்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கறுப்புச்சந்தை வியாபாரிகள் மாவின் விலையை அதிகரித்து விற்பனை செய்கின்றனர். இந்த விலைக்கு மாவைக் கொளவனவு செய்து வர்த்தகத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது - என்றனர்.

பிறிமா நிறுவன அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், அரிசி மற்றும் எரிவாயுவின் விலை அதிகரிப்புக் காரணமாக மக்கள் கோதுமை மாவை அதிகளவு தமது உணவுத் தயாரிப்புகளுக்குப் பயன்படுத்துவதே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம் - என்றார். (8-202)

# யாழ்.குடாநாட்டில் அடுத்த ஆண்டுமுதல் சமுர்த்தி அபிவிருத்தி உதவித் திட்டம்

## முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன

வலி.வடக்கு,நவ.16

சமுர்த்தி அபிவிருத்தி உதவித் திட்டத்தை அடுத்த ஆண்டு முதல் யாழ். குடாநாட்டில் செயற்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளை யாழ். செயலக சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வாரம் நிதி அமைச்சிலிருந்து யாழ். வந்த உத்தியோகத்தர்களுடன் யாழ். செயலக சமுர்த்தி அபிவிருத்தி உதவி ஆணையாளர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் காரியாலயங்களுக்குச் சென்று கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

முதற்கட்டமாக இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக வீடுவீடாகச் சென்று அளவைப் படிவம் மூலம் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக கிராம அலுவலர்களினால் நியமனம் செய்யப்படும் முகவர்களும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் படிவங்களை நிரப்பி தகவல்களை சேரிக்கவுள்ளனர்.

சமுர்த்தி அபிவிருத்தி உதவியானது இந்த அளவைப் படிவங்களில் உள்ள விவரங்களில் இருந்தே தகுதியான பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் முதற்கட்டமாக பரீட்சார்த்தமாக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-68)

## சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான

# எழுத்துப் பரீட்சையில் கிளிநொச்சியில் 326 பேர் சித்தியடைந்துள்ளனர்

யாழ்ப்பாணம்,நவ.16

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 326 பேர் சித்தியடைந்துள்ளனர்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடமாடும் சேவை ஒன்றை நடத்தியது.

அதில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப்பரீட்சை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த எழுத்துப் பரீட்சையில் தோற்றிய 359 பேரில் 326 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான செயன்முறைப்பரீட்சை தற்போதைய காலநிலை காரணமாக உடனடியாக நடத்தமுடியாதுள்ளது எனவும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும் என்றும்-

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான போக்குவரத்துப் பரிசோதகர் ஆர்.ரி.ஏ.குலாஸ் தெரிவித்தார். (10-5)

# ஆட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத அணிக்குத் தற்காலிகத் தடை விதிப்பு

வலி.வடக்கு,நவ.16

சுன்னாகம், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு விளையாட்டுத்துறையினரால் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்தியமகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் ஆட்ட விதிமுறைகளுக்கு மாறாக விளையாட முயன்ற விளையாட்டு வீரருக்குச் சிவப்பு அட்டை காட்டப்பட்டபோது அணியின் ஏனைய வீரர்கள் நடந்துகொண்ட விதம் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டு விதிமுறைகளுக்கு அமைவாக விளையாடாது ஏனைய வீரர்கள் நடுவருடன் முரண்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, குழப்பத்தை உருவாக்கிய வீரர்கள் ஒழுக்காற்றுக் குழுவினால் விசாரணை செய்யப்பட்டு மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10-86)

# பிரபாவின் பிறந்த நாளன்று விசேட பொங்கலுக்கு ஏற்பாடு

வலி.வடக்கு, நவ.16

தேசியத் தலைவரின் 50 ஆவது அகவையையொட்டி யாழ்ப்பாணம் நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களினால் 50 பானைகளில் பொங்கல் வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கோட்டை முனியப்பர் ஆலயத்தில் தலைவரின் பிறந்த நாளான எதிர்வரும் 26 ஆம் திகதி இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் கலந்துரையாடலைத் தொடர்ந்து இம்முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (10-86)

# கதவுகளைத் திருடியவருக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாதகால சிறை!

வீடு ஒன்றிலிருந்து மூன்று கதவுகளைத் திருடிய நபருக்கு யாழ். நீதிமன்றம் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இம்மாதம் 4 ஆம் திகதி யாழ். கோயில் வீதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான மூன்று மரக்கதவுகள் திருடப்பட்டிருந்தன.

இத்திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் முள்ளி வீதி, அரியாலையைச் சேர்ந்த சிவநாதன் வசிகுமார் என்பவரை யாழ். பொலீஸார் கைதுசெய்து நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

குறிப்பிட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியதுடன், பொலீஸாரால் மீட்கப்பட்ட மூன்று கதவுகளையும் உரியவரிடம் ஒப்படைக்கும்படி பொலீஸாருக்கு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார். (10-7)




உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பரிசில்நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சபா.ஜெயராசாவின் துணைவியார் ஆசிரியை பானுமதி ஜெயராசா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.


பேராசிரியர் சபா.ஜெயராசா, வித்தியாலயத்தின் பழைய மாணவன் கே.ரி.கோணேஸ் (லண்டன்), நிக்கொட் நிறுவனத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் க.தவரத்தினராசா, அதிபர் சு.யோகராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி நிகழ்வின் போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி நா.சத்தியநாதன், பாடசாலை அதிபர் வ.கயிலேஸ்வரன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி உபஅதிபர் எஸ்.பத்மகாந்தன், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறிஸ்கந்தராசா ஆகியோர் மாணவர்களின் ஆக்கங்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். *(படம். சாவகச்சேரி செய்தியாளர்)*



யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய முத்தமிழ் விழாவின் ஆரம்ப நிகழ்வில் பாடசாலைக் கொடியை அதிபர் த.ஞானப்பிரகாசர் ஏற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன், குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார், உதவிப்பங்குத் தந்தை மற்றும் கி.யூலியஸ் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படங்கள்: குருநகர் செய்தியாளர்)*



புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலையில் அண்மையில் நிறுவப்பட்ட தெய்வப்புலவர் திருவள்ளுவர் சிலை திறப்புவிழாவில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சிலையை வடிவமைத்த யாழ்.கல்விவலய சித்திரபாட முதன்மை ஆசிரியர் செ.வரதராஜன், சமாதான நீதிவான் கே.தருமலிங்கம், குட்டியபுலம் அ.த.க.பாடசாலை அதிபர் செ.கந்தசாமி ஆகியோரைப் படத்தில் காணலாம். *(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்.)*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 14 05 1910



மறைவு 18 10 2004

### திருமதி கனகம்மா நாகமுத்து (கங்காணி)

கடந்த 18.10.2004 இல் இந்தியாவில் காலமான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானையும் நயினைநாகபூசணி அம்பாளை யும் வேண்டுகின்றோம்.

எமது இல்லத்தில் நாளை (17.11.2004) புதன்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளு மாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: ஆத்ம சாந்திக் கிரியைகள் யாவும் இந்தியாவில் மகளின் இல்லத்தில் நடைபெறும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், திருமதி க.கணபதிப்பிள்ளை (மருமகள்) நா.கணேசு (மகன்)

வங்களாவடி, J/நயினை-5. T.P 0712541973

(38623)(11-16-32)

## கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரி 2001 கலைப்பிரிவு மாணவரும் கல்லூரி இந்துமத வழிபாட்டுப் பிரதம குருவுமாகிய

**சிவ ஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஹரிஹர சர்மா**

அவர்களின் அகால மரணத்தினால் ஆழ்ந்த துயருற்றி ருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இந்து மாமன்றம், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (38660)(11-16-32) அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வ.நகுலேஸ்வரக் குருக்களின் சகோதரன்

**சிவஸ்ரீ வரதராஜக்குருக்கள் ஹரிஹர சர்மா**

14.11.2004 அன்று அகாலமரணமடைந்ததையிட்டு துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய அம்பாளையும் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையும், கட்டப்பிராய் மக்களும்

(38650)(11-16-32)

## கண்ணீர் அஞ்சலி

14.11.2004 அன்று இராணுவ வாகனம் மோதி கொடிகாமம் பகுதியில் அகாலமரணமடைந்தவரும் யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட இசைத்துறை மாணவி வ.கோகுலவாணியின் சகோதரருமான

**வ.ஹரிஹர சர்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இசைத்துறை முதலாம் வருட மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழகம்

(38659)(11-16-32)

## மரண அறிவித்தல்

### திருமதி றோசம்மா நாகமணி

இளவாலையைப் பிறப்பிடமாகவும் 'யசிந்தா இல்லம்' ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றோசம்மா நாகமணி (13.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-அக்கினஸ் அக்கா (இளைப்பாறிய ஆசிரியை, யா/புனித சாள்ஸ்.ம.வித்.) ஆகி யோரின் ஏக புதல்வியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகமணி யின் (கிளாகர் - நிர்வாக உத்தியோகத்தர், ப.நோ.கூ சங்கம், ஏழாலை மேற்கு) அன்பு மனைவியும் லில்லிபுஸ்பராணி (கனடா), ஜெயரட்ணம் வில்லியம் (கனடா - இளைப்பாறிய அத்தியட்சகர் இ.மி.ச., கொழும்பு), தரைத்தினம் (இளைப்பாறிய சாலை முகாமையாளர், காரைநகர்), விஜயரத்தினம் (இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர், கல்விவலயம்-யாழ்ப்பாணம்), அரியரத்தினம் (ஆசிரியர்), ஞான ரத்தினம் (இந்தியா), ஜசிந்தா (லண்டன்), செல்வரத்தினம் (ஜீவா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜேம்ஸ் (சட்டத்தரணி, அவுஸ்திரேலியா), சறோஜினி (கனடா), சந்திரா, கலா, புஷ்பா (இந்தியா), ஞானசோதி (Home Office, Immigration Depart ment U.K), தேவிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி நாளை (17.11.2004) புதன் கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத் தில் இடம்பெற்று, பூதவுடல் புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யசிந்தா இல்லம், ஏழாலை. கிழக்கு, ஏழாலை. T.P.No.: 0602213278* (38655)(38-11-16-32) தகவல் N.N. அரியரத்தினம்

## கூரைபிரித்துத் திருட்டு

கோப்பாய்,நவ.16

கோப்பாய்ச் சந்தியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தனியார் தொலைத்தொடர்பு நிலையமொன்றின் கூரையைப்பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் புதிய கைத்தொலை பேசி மற்றும் 15ஆயிரம் ரூபா ரொக்கப்பணம், 15ஆயிரம் ரூபாபெறுமதி 'ரீசார்ட்' என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வரு கின்றனர். (3-203-72)

## அழகியல் கண்காட்சி

இளவாலை,நவ.16

உலக அழகியல் தினத்தை முன்னிட்டு இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரிச் சமூ கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட அழகியல் கண் காட்சி இன்று செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் வணபிதா ஜேம்ஸ் சிங்கராஜா தலைமை யில் கல்லூரி யூ.கே.மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சியில் நாட கம், சித்திரம், சங் கீதம் போன்ற பிரிவு களில் மாணவர்களின் ஆக்கங்கள் இடம்பெற வுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது. (10-12-48)

## ஆசிரிய கலாசாலையில் ஒளிவிழா

யாழ்ப்பாணம்,நவ.16

கோப்பாய் ஆசிரிய கலாசாலை கிறிஸ் தவ மன்றம் நடத்தும் ஒளிவிழா நிகழ்வு நாளைமறுதினம் வியா ழக்கிழமை காலை 8.30 மணிக்கு அ.செல் வநாதன் தலைமை யில் ரதிலக்ஷமி மண் டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கோட்ட குரு முதல்வர் அருட்திரு. மைக்கல் சௌந்தர நாயகம் கலந்துகொள் வார். (எ-12)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண வணிக நிலையம், யாழ்ப்பாணம் இரும்பகம் ஆகியவற் றின் உரிமையாளருமாகிய

**தர்மலிங்கம் பரராஜசிங்கம்**

அவர்களின் மறைவை கேள்வியுற்று துயரமடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் 6 ஆம் வட்டாரம் நயினாதீவு. T.P-0712 248726

(38660)(11-16-32)

## கண்ணீர்ப் பூக்கள்

எமது பாடசாலை தரம் 3 மாணவன்

**செல்வன் பரமேஸ்வரன் கருணாகரன்**


அவர்களின் திடீர் மறைவினால் (13.11.2004) துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மறைந்த மாணவனுக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை

(38656)(11-16-32)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 04 1970



மறைவு 09 11 2002

### அமரர் அழகர்சாமி சிவகுமார்

ஈராண்டு ஆனதுவோ எங்கள் செல்வா
இன்னமுத சிவகுமாரா ஏங்குகின்றோம்
போரண்ட வாழ்வதனில் பெரிதும் திழைத்து
பிரியமுடன் எமையெல்லாம் பேணிக்காத்தாய்
ஊராண்ட உன்பிரிவை உலகத் தெண்ணி
உறக்கமின்றி யலைகின்றோம் எம்சி வாவே
நீராண்ட விழிகமந்து நீக்கதியாய் நாமிருக்க
நீ சிவனின் தாழின் கீழ் நிதமும் தூங்கு

56, கே.கே.எஸ்.றோட், கொக்குவில். (38654)(43-11-16-32) குடும்பத்தினர்.

## கேள்வி அறிவித்தல்

### வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ.இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | யா/கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம் தற்காலிக கட்டடம் அமைத்தல் (Semi Permanent) | 250.00 | 1150.00 | எம்.8 |

01) அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08 ம், அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்து முடிக்க முடியுமா னால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப் பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி "அ" இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்கமுடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02) கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15 % சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15 % சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாக குறிப் பிடப்படுதல் வேண்டும்.

03) மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 17.11.2004 ஆம் திகதியிலிருந்து 22.11.2004 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வலி காமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றி னையும் கேள்விப் பத்திரி இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித் தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்ததாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத் திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05) தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியான நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி றெ.இருதயநாதன், வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.

(சி-39055)(29-11-16-32)

## கூட்டுறவுச் சங்கக் கட்டடம் இம்மாதம் திறப்பு

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தினரால் கொடிகாமம் நகர்ப் பகுதியில் 12 லட்சம் ரூபாவில் புனரமைக்கப்பட்ட மேல்மாடிக் கட்டடம் வரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் வ.ந.வல்லிபுரம் தலைமையில் திறந்துவைக்கப்படும் இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ்.மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளர் செ.கனகசபாபதி உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-117)

## பகிரங்க ஏல விற்பனை

**யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரிச்சங்க சிற்றுண்டிச்சாலைக்குரிய பாவித்த பொருள்களும், வேறு சில பொருளகளும் 2004.11.23 ஆம் திகதி காலை 10.00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.**

ஏல விற்பனையில் பொருள்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தி பகல் 4.00 மணிக்கு முன்னர் குறிப்பிட்ட பொருள்களை மாவட்டச் செயலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

பொருள்களைப் பார்வையிட விரும்புபவர்கள் 2004.11.18,19,22 ஆம் திகதிகளில் (அலுவலக நாள்களில்) காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை மாவட்டச் செயலகத்தில் பார்வையிடலாம்.

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
10.11.2004

நிர்வாக உத்தியோகத்தரும், செயலக நலன்புரிச்சங்கத் தலைவரும்.

(38666)(43-13-14)

## இரண்டாம் வருட நினைவுகளுடன்...

தோற்றம் 20 - 04 - 1970



மறைவு 09 - 11 - 2002

### அமரர் அழகர்சாமி-சிவகுமார்

திதி: 16.11.2004

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

"ஸ்ரீசரவணா விற்பனை நிலையம்", இல.10,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

A.சரவணகுமார்.

(38668)(43-13-14)

## கண்ணீர் அஞ்சலி



சமுர்த்தி முகாமையாளர் (வலயம் I)
வ.கேதீஸ்வரசர்மா அவர்களின்
அன்புச் சகோதரன்

### வ.ஹரிஹரசர்மா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.

(39669)(43-13-14)

## கண்ணீர் அஞ்சலி

### நாகலிங்கம் பொன்னம்மா

(கைதடி மேற்கு)

எமது கோட்டக்கல்வி அதிகாரி **நா.சத்தியநாதன்** அவர்களின் தாயாரின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிக்கழகம்,
வலயக்கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி, தென்மராட்சி.

(சி-39061)(43-13-14)

## நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், சாந்த குணசீலராய், அன்பு நிறை உள்ளத்தினராய் கடமை தவறாத கண்ணியவானாய், பொறுமை மிகுந்தவராய் வாழ்ந்து எம்மை நேர்வழியில் வழிநடத்திய அன்புத் தெய்வமான



### சு.சபாநாதன்

அவர்களின் மறைவுச்செய்திகேட்டு உடனே வந்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறி எம்மை ஆறுதற்படுத்திய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் உடனிருந்து சரீர உதவிகள் செய்தவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தோருக்கும் இன்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திப்பிரார்த்தனையில் கலந்துகொள்கின்றவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்நத நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

37/5,முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மகள்,
சகோதர சகோதரிகள் மற்றும்
குடும்பத்தினர்.

(38661)(43-13-14)

## சாவகச்சேரியில் கொடி வாரம் நேற்று ஆரம்பமாகியது

தென்மராட்சி,நவ.16

சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திக்கென கொடி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நேற்று முதல் கொடியினை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ. தெய்வேந்திரம் நகர வர்த்தகர் க.புலேந்திரனிடம் வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கொடிவார ஆரம்பநாள் நிகழ்வு நேற்று வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சங்கத் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(எ-117)

## டெங்கு குறித்த பதாதைகளை தொங்கவிடுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, நவ.16

நாட்டில் டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பான தொங்கு பதாதைகளை உள்ளூராட்சி சபைப் பகுதிகளில் தொங்கவிடுமாறு உள்ளூராட்சிப் பணிப்பாளர் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் கடித மூலம் அறிவித்துள்ளார்.

உயிர் கொல்லி நோயான டெங்கு நோய் ஏற்படாதிருக்கும் வழிவகைகளைக் குறிக்கும் வாசகங்களைப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் எழுதி தொங்கு பதாதைகள் மூலம் பொதுமக்களின் பார்வைககு வைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார்.

(எ-117)

## தேவை

**45 வயதுக்கு உட்பட்ட அனுபவம் உள்ள பில் கிளாக் உடன் தேவை.**

தொடர்புகளுக்கு:

**சரஸ்வதி விலாஸ்**
195, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

(38672)

### நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது. 2 ஆவது வெற்றி வாரம் தனுஷ், பிரியா நடித்த **ட்ரீம்ஸ்** (ரீல்ஸ)

காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே.)

வெகுவிரைவில் இரவு 9.00 (பு.நே) காட்சியாக **RAMBO-3**

(சி-38673)

### நிரஞ்சனாஸ் சங்கானை

ராஜ், திவ்வியா நடித்த **கேம்பஸ்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) **RAMBO-3**

(சி-38672)

### ராஜா யாழ்ப்பாணம்

அஜித் + அஜித், பூஜா நடித்த **அட்டகாசம்** (ரீல்ஸ்)



காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30.

(சி-38750) ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

### நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த

டொல்பி ஒலி அமைப்புடன்

**சத்ரபதி**



தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே)

## கலாசார அலுவலருக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,நவ.16

வீடியோப்படம் பிடிப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று நாளை புதன்கிழமைமுதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை திருகோணமலை துளசிபுரத்தில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டறையில் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அழைக்கப்பட்டுள்ள கலாசார உத்தியோகத்தர்களுக்குத் தங்குமிடமும் உணவு வசதிகளும் தம்மால் ஒழுங்கு செய்து தரப்படும் என மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார்.

**சுவாமியே சரணம் ஐயப்பா!**

## ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை



### கந்தர்மடம்

(யாழ்.செட்டியந்தாழ்வு ஞானவைரவர் கோயில்)

இன்று முற்பகல் 10.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஐயப்ப சுவாமிக்கு விஷேட அபிஷேகமும், விஷேட பூஜையும் சாமிமார்களுக்கு மாலை அணியும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து பஜனைகளும் படிப்பூஜைகளும் நடைபெறும்.

**இன்று தொடக்கம் தை மகர ஜோதி வரை தினமும் காலை 11.00 மணிக்கு நடைபெறும்.**

இந்தப் பூஜைகளில் ஐயப்பபக்தர்கள் பங்குபற்றி ஐயனின் திருவருள் பெற்று ஓங்குக.

ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை, செட்டியந்தாழ்வு,
ஞானவைரவர் தேவஸ்தானம், கந்தர்மடம்,
ஸ்ரீநாகேந்திர பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார்.

(39668)(43-13-14)

## மரண அறிவித்தல்கள்

### குலத்துரை குலராஜசேகரம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உரும்பிராய் இந்துக்கல்லூரி)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குலத்துரை குலராஜசேகரம் அவர்கள் நேற்று (15.11.2004) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் பாசமிகு கணவரும் நவசீலன், சற்குணசீலன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சைவப்பாடசாலை ஒழுங்கை,*
*திருநெல்வேலி.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(38670)(43-13-14)

### பரமன் மார்க்கண்டன்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி, மகாத்மா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரமன் மார்க்கண்டன் (இளைப்பாறிய உப அதிபர், இமையாணன் மகாவித்தியாலயம்) நேற்று (15.11.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வமணியின் அன்புக் கணவரும் இளங்கோ (பாபு), அனுசுயா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு அவர்களது குடும்ப மயானமான ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாத்மா வீதி,*
*ஐயனார் கோயிலடி,*
*நெல்லியடி.*

தகவல்:
மனைவி-செல்வமணி,
பிள்ளைகள்-இளங்கோ (பாபு),
அனுசுயா.

(சி-39062)(43-13-14)

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருடம் கார்த்திகை மாதம் 3 ஆம் நாள் (18.11.2004) வியாழக்கிழமை காலை 10.45 மணிமுதல் 11.45 மணி வரையான மகரலக்கினமும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

### சுந்தர்சன்
### SUNDHARSON

என்னும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P: 021- 222 -2751
Suntel : 4591569
Fax: 021- 222 -2751

உரிமையாளர்
சுந்தர்சன்.

(39060)(29-43-13-14)

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.)

# இடமாற்றச் சபையின் மூலமே இனிமேல் ஆசிரியர் இடமாற்றம்

## மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

காரைதீவு,நவ.16

ஆசிரியர் இடமாற்றங்கள் எழுந்தமானமாகச் சீரற்றமுறையில் காலம் தப்பி இடம்பெறுவதாகப் பல முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. எனவே, இனிமேல் ஆசிரியர் இடமாற்றங்கள் இடமாற்றச்சபை மூலமே செயற்படுத்தப்படும்.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் நேற்று தன்னைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் உறுதியளித்தார்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மட்டு- அம்பாறை மாவட்ட தூதுக்குழுவினருடனான சந்திப்பு நேற்று செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் இரு மணி நேரம் நடைபெற்றது.

சங்கத்தின் மட்டு.மாவட்டத் தலைவர் எஸ். தருமராஜன், அம்பாறை மாவட்டச் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா, காரைதீவுக் கிளைச் செயலாளர் ம.சிவபாலன், மட்டு.மாவட்ட செயலாளர் முருகு தயானந்தன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களான சீ.எம். குமாரசாமி, எஸ்.ரவீந்திரன், சின்னத்தம்பிப்போடி, ஏ.தங்கராஜா ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தூதுக்குழுவினர் முன்வைத்த பல பிரச்சினைகளைக் கேட்ட கல்வி அமைச்சின் செயலாளர், வியப்பும் ஆச்சரியமுமடைந்தார். மட்டு. அம்பாறை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகள் அங்கு முன்வைக்கப்பட்டன.

கல்விச் செயலாளர் மேலும் கூறுகையில்-

வடக்கு - கிழக்கில் சுமார் 6 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவற்றில் கணிசமானளவு விரைவில் நிரப்பப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தொண்டராசிரியர் நியமனம், ஆயிரம் உயர்தர ஆசிரியர் நியமனம், ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் நியமனம் என்பன விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளன.

தொண்டராசிரியர் நியமனத்திற்காக 1,160 பேரின் பெயர்ப் பட்டியல் முதல் சமர்ப்பிக்கப்பட்டபோது 1,000 பேர் நியமிக்கப்பட மீதி 160 பேர் விடுபட்டுவிட்டனர்.

தற்போது புதிதாகத் தொண்டராசிரியர் உள்ளீர்க்கப்படும்போது விடுபட்ட 160 பேரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். உயர்தரம் சித்திபெற்ற ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், சிற்றூழியர்களை உள்ளீர்க்க எமக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. தொண்டர்கள் எனப்படுவோர் எமது ஊழியர்களல்லர். இதனைச் சகலரும் உணர வேண்டும். வடக்கு - கிழக்கில் உள்ள 24 கல்வி வலயங்களிலும் 5 வருடங்களுக்கு மேலாகக் கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றி வருவோரை நிரந்தரமாக்குமாறு நாம் கல்வியமைச்சைக் கோரியுள்ளோம். அதற்கான விபரங்களையும் உரியவர்களிடம் சமர்ப்பித்துள்ளோம் - என்றார்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவினர் கூறுகையில் -

புதன்கிழமைகளில் அதிபர், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்களைச் சந்திக்கும் அலுவலக நாளாகவிருந்தும் அங்கு அதிகாரிகள் கூட்டம் நடைபெறுவதனால் சந்திக்கமுடியாமலுள்ளது.

மேலும், வருட இறுதித் தவணையிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் கருத்தரங்குகள் நடத்தப்படுவதால் பாடசாலைக் கல்வி பாதிப்படைகின்றது - என்று கூறினர். இதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் செயலர் பதிலளித்தார்.

ஆசிரியர்களுக்கான கடன்கள் பரவலாகக் கூடுதலாக வழங்கப்பட வேண்டும் என்பதைச் செயலாளர் ஏற்றுக்கொண்டார். வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்பிற்கு கணிதபாடத்திற்கு 3 பரீட்சைகளை நடத்தியது. 3 ஆவது பரீட்சையில் 17 பிழைகள் இருப்பதாக அங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

(எ)

# சு.கட்சி முன்னாள் எம்.பி. வீடு தாக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்டது!

கொழும்பு,நவ.16

கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தனவின் கம்பஹா இல்லட மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதுடன் வீட்டுக்குத் தீயும் வைத்துள்ளனர்.

கடந்த சனியன்று நள்ளிரவில் வீட்டிற்குள் புகுந்த நான்குபேர் கொண்ட குழுவினர் காவலரைத் தாக்கிவிட்டு வீட்டை தீயிட்டுக் கொளுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், தளபாடங்களுக்கும், வீட்டுப்பாவனைப் பொருள்களுக்கும் அழிவு ஏற்பட்டுள்ளன. வீட்டு ஜன்னல் கதவுகளும் நொறுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த நள்ளிரவு காவலரைத் தவிர வேறு எவரும் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது அரசியல் போக்கைப் பிடிக்காத எனது கட்சியைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதியே இதனைச் செய்திருக்கலாம் என தாம் நம்புவதாக முன்னாள் எம்.பி. சரண குணவர்த்தன தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி ஆட்சியின்போதுகூட எனது உடைமைகளுக்கும் பாதிப்போ, சேதமோ ஏற்பட்டதில்லை.

ஆனால், இப்போது சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் அதுவும் அக்கட்சியின் பலமான மாவட்டத்தில் - இந்த அடாவடித்தனம் நடந்துள்ளது என்றும் -

கடந்த ஆறாம் திகதி கொழும்பு, மாதிவிலவில் உள்ள எனது இல்லத்திற்கும் சேதம் ஏற்பட்டது என்றும் -

சுதந்திரக்கட்சியின் முன்னாள் எம்.பியும் மீரிகம பகுதியின் கட்சி அமைப்பாளருமான சரண குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

(எ-க)

## சண்டைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிடப்படமாட்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியில் பெரிய, நடுத்தர, சிறிய வகைக் கள்ளர்கள் இருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க முதல் ரவி கருணா நாயக்கா வரை இந்தப்பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸ[illegible]யக்க வெலிக் கடைச் சிறைச்சாலையில் இருப்பார்.

நீதித்துறையை அவமதித்த குற்றத்திற்காக உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கவிருக்கிறது என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஜே.ஆர்.ஜெ[illegible]வர்த்தனாவின் இந்த அரசமைப்பு குழப்பமானது. அதனை இல்லாமல் செய்யவேண்டும். அதற்கு ஜனாதிபதி தயாராகிவிட்டார். ஜே.வி.பியின் ஆதரவும் அதற்குக் கிடைக்கும் - என்றார் அவர். (எ-க)

## பூசகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறும் -

அவரைப் புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் - கொடிகாமம் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

பதில் நீதிவானின் உத்தரவின் பேரில் கொடிகாமப் பொலீஸார் சிப்பாயான டபிள்யூ.டபிள்யூ. ஆர்.ஜெயசிங்கவைக் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

இதன்படி, இவர் நாளை புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பஸ்ஸில் சாரதியுடன் பயணம் செய்த இரு சிப்பாய்களையும் நீதிமன்றத்திற்குச் சமுகம் அளிக்கச் செய்யுமாறு நீதிவான் கொடிகாமம் பகுதியில் உள்ள இராணுவத்தின 53ஆவது பிரிவிற்கு அறிவித்துள்ளார். (எ-6)

## நீர் நிரம்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் குழந்தை கிணற்றுக்காக வெட்டப்பட்ட நீர்நிரம்பிய குழியினுள் வீழ்ந்து கிடந்தது தெரியவந்தது என்றும் - குழந்தையின் தாயார் தெரிவித்தார்.

தாம் உடனடியாகக் குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றதாகவும் அங்கு குழந்தை இறந்தமை குறித்துத் தமக்குக் கூறப்பட்டதாகவும் - அவர் மேலும் கூறினார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-12-15)

## அகதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கால நன்மை கருதி, விசேட வதிவுரிமை வழங்குமாறு கோரி இலங்கையிலும் மற்றும் சர்வதேச ரீதியிலும் இயங்கும் தமிழ் அமைப்புகள் ஆஸ்திரேலிய பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு மகஜர்களையும், மின்னஞ்சல்களையும், தொலைநகல்களையும் அனுப்ப முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

(எ-க)

## பிக்கு எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தார்.

நீதியரசர்கள் தமது தீர்ப்பில் -

வண.புஞ்ஞானந்த தேரரை ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து நீக்கியமை சட்டபூர்வமானதல்ல எனவும் -

இதன் காரணமாக அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்துச்செய்யுமாறு ஹெல உறுமய தேர்தல் ஆணையாளருக்கும் நாடாளுமன்ற செயலாளருக்கும் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட வேண்டும் எனவும் - குறிப்பிட்டிருந்தனர். (எ-க)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு பெருங்குழப்பத்தில் மூழ்கும்.

நாட்டின் தலைவர் அவர் எந்தக் கட்சியைச் சேர்தவராக இருந்தாலும் நாட்டின் தலைவரே. எனவே, அமைதி முயற்[illegible]ள் தொடர்பான நாட்டுத் தலைவியின் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டும் - என்றார் கரு ஜயசூரிய.

இரண்டு பெரிய கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டியது தொடர்பாக கருஜயசூரிய தெரிவித்த கருத்துகளை வரவேற்று ஜனாதிபதி குமாரதுங்க உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

இரு கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு சில தலைவர்களாவது இருப்பது நெஞ்சைத் தொடுகின்றது.

கட்சி அரசியலுக்கு அப்பால் செயற்படவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

என்னைக்கொல்ல முயன்ற புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனும் நான் பேசத் தயாராக இருக்கிறேன்.

அரசமைப்பை மாற்றுவதன் மூலம் எனது ஆட்சிக்காலத்தை நான் நீடிக்க முயல்கிறேன் என்று கூறுவது முற்றிலும் தப்பு. நான் வீட்டுக்குப் போவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால், நாட்டை இன்றைய [illegible]லையில் விட்டுச்செல்ல நான் தயாரில்லை.

ஜனாதிபதி பதவியிலிருந்து இறங்க முன்னர் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை நான் ரத்துச் செய்வேன்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் நாட்டின் துறைசார் நிபுணர்களும் உரிய பங்களிப்பை வழங்க முடியும்.

அவர் சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் மூலம் உரிய ஆலோசனைகளை வழங்கலாம்.

நாட்டில் நிரந்தர அமைதிக்கு வழிசெய்யும் தீர்வைக்காணும் முயற்சி தொடர்பாகச் சகல தரப்புகளினதும் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் ஊடாகப் பெற்றுக்கொள்ள அரசு தயாராக உள்ளது.

பொலீஸாரையும், நீதித்துறையினரையும் நான் குறை கூறியதாக அண்மையில் ஊடகங்கள் விமர்சித்திருந்தன. நீதித்துறையிலும் பொலீஸ துறையிலும் ஒரு பகுதியினர் இழைக்கும் தவறையே நான் குறிப்பிட்டேன. ஒட்டுமொத்த நீதித துறையையோ, பொலீஸாரையோ நான் குற்றம சுமத்தவில்லை.

- இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார். (எ-க)

## அமெ.வெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லின் இடத்திற்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொலின் பவல், முன்னாள் இராணுவத் தளபதி, புஷ்ஷின் ஆட்சிக் காலத்தின் முதல் நான்கு ஆண்டு காலமும் வெளிவிவகாரத்துறைக்குப் பொறுப்பாக இருந்தவர்.

அவர் ஒரு மிதவாதி உலக நாடுகளுடன் இணைந்து செயலாற்றவேண்டும் என்று கூறி வந்தவர் என்றும் -

இதனால், கொலின் பவலுக்கும் ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் ஒத்துவரவில்லை என்றும் -

புஷ்ஷின் அமைச்சரவையில் உள்ள சிலரும் பவலை எதிர்த்தனர் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் முறையாகத் தாம் அமெரிக்க வெளிவிவகார அமைச்சராகப் பதவி ஏற்கப் போவதில்லை என அண்மையில் நடைபெற்று முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு என அண்மையில் நடைபெற்று, முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே அவர் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(எ-க-6)

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களது பெற்றோரும் பொதுமக்களும் ஈடுபட்டனர் கொட்டும் மழையின் மத்தியிலும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

கொடிகாமம், கைதடி வடக்கு, கோயிலாக் கண்டி ஆகிய இடங்களில் இருந்து யாழ்.நகர் நோக்கி பாடசாலைச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் நாவற்குழிச் சந்தியில் நிற்கும் மாணவர்களை ஏற்றுவது இல்லை என்றும் -

இதனால், நாவற்குழிப்பகுதி மாணவர்கள் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் பயணிக்க வேண்டி ஏற்படுவதாகவும் - மாணவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

மறியல் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ், வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளுடன் இது விடயமாக உடனடியாகத் தொடர்புகொண்டு பேச்சு நடத்தினார். இதனையடுத்து இன்று தொடக்கம் நாவற்குழி மாணவர்களை பஸ்களில் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. பின்னர் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

(எ)

WALK-IN INTERVIEW

Applications are invited from qualified and experienced persons to fill the immediate vacancies

1. Lectures
The ideal candidate should be a Bachelor's Degree holder in Information Technology from any recognized University or Equivalent Qualification from any other Professional bodies. Fluency in English and ability to correspond in this language is an advantage.

2. Instructors
Undergraduates who are holding diploma certificates in computer applications from recognized Institutions.

3. Receptionists.
G.C.E. Ordinary Level with a credit pass in English Language. Ability to converse fluently in English.

Those who are interested are requested to call over at this office with their CVs and Originals of the relevant certificates on 21st November 2004 from 10.00 A.M – 1.00 P.M.

Institute of Informatics Studies (IIS)
No. 100, Clock Tower Road, Jaffna.
021 222 2831 / 021 222 6933

அமெரிக்கா LOTTRY விசா
விண்ணப்பிக்கத்
தொடர்புகொள்க

SKY COMPUTERS (PVT) LTD.
N0.89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 -4590325 Fax: 021-4590325
★ DIPLOMA IN HARDWARE TECHNOLOGY
3 Months 3000/=
புதிய பிரிவு ஆரம்பம்: 22.11.2004
★ ரைப்செற்றிங் ★ வைன்ரிங்
★ ஸ்கானிங் ★ CD பதித்தல்
★ போட்டோ கொப்பி ★ கணனி திருத்தங்கள் ★ கணனி விற்பனை
★ போட்டோ கொப்பி மெசின் திருத்தங்கள்
(E-Mail: skycom@wow.lk)
(கச்சேரிக்கு அருகில்)
Today You learn Tomorrow You lead
(எ-39053)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.